விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 03 வெள்ளிக்கிழமை (17.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 180

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாமிடத்து தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# ஜே.வி.பி. விலகியது

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இருந்து தமது கட்சி நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவுடன் வெளியேறி விட்டதாக ஜே.வி.பி.நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.**

**நேற்றுக்காலை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.**

கொழும்பு தேசிய நூலக கேட்போர்கூடத்தில் காலை 10மணிக்கு இடம்பெறுவதாக இருந்த செய்தியாளர் சந்திப்பு கட்சியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச சுகவீனம் உற்றிருப்பதால் சற்றுத்தாமதமாகவே ஆரம்பமானது.

அங்கு கட்சித்தலைவர் சோமவன்ச அமரசிங்க பேசுகையில் எமது கட்சி நேற்று முன்தினம் நள்ளிரவுடன் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி விட்டது.

அரசில் இருந்து நாம் வெளியேறிவிட்டால் ஏற்படும் விளைவுகளுக்கு எமது கட்சியே பொறுப்பென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார். இதனை நாம் முற்றாக மறுக்கிறோம்.

எக்காரணத்தைக் கொண்டும் இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு பிரேரணை பாராளுமன்றிற்கு கொண்டு வரப்படும்

(கொழும்பு)

விசேட சட்டமூலத்தின் கீழ் சுனாமி தொடர்பான பொதுக்கட்டமைப்பு பிரேரணை பாராளுமன்றிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

இது பற்றி செவ்வாய் இரவு ஜனாதிபதி மாளிகையில் அறிவிக்கப்பட்டது. இங்கு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பொதுக்கட்டமைப்பிற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ,அநுராபண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன, ஜோன்செனவிரட்ண ஆகியோர்கலந்து கொண்டிருந்தனர்.

இருப்பினும் இப்பொதுக்கட்டமைப்பை பாராளுமன்றிற்கு கொண்டு வருவதில்லை என தான் தமிழ்க்கூட்டமைப்பிடம் உறுதியளித்திருப்பதால் சிலபிரச்சினைகள் எழலாம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இருப்பினும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. அமைச்சர்கள் இராஜினாமா செய்தனர்

ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்களும் அவர்களுடைய பிரதிய மைச்சர்களும் தங்களது இராஜினாமாக் கடிதங்களை உத்தியோக பூர்வமாக நேற்று ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இவர்கள் கையளித்துள்ள இராஜினாமாக் கடிதங்களில் விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்க ஜனாதிபதி முயல்வதை தங்களது கட்சி ஏற்றுக்கொள்ள முடியாதுள்ள நிலையிலேயே தாம் இராஜினாமா செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.(ந)

## மூன்று நாட்களில் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகும்!

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்திற்கான பணிகளை முன்னெடுப்பதற்குரிய பொதுக்கட்டமைபில் அரசும் புலிகளும் இன்னும் மூன்று நாட்களில் கையெழுத்திடுவர் என்பதை விடயம் அறிந்த வட்டாரங்கள் நேற்றிரவு உறுதிப்படுத்தின.

இதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகளை செய்வதற்காக நேற்றுவரை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் தங்கியிருந்த கொழும்பிற்கான நோர்வேத்தூதுவர் ஹானஸ் பிறட்ஸ்கர் அவசர அவசரமாக இலங்கைக்கு திரும்பினார்.

இதேசமயம் இலங்கைக்கு உதவும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டின் இணையத் தலைமை நாடுகள் நான்கினதும் உயர்மட்டக் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முன்னெடுப்பிற்கு பொதுக்கட்டமைப்பு அவசியம்

### அமெரிக்கா வலியுறுத்து

(கொழும்பு)

தேக்க நிலையில் உள்ள அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரிய அடித்தளமாக கருதப்படும் பொதுக்கட்டமைப்பை இலங்கை அரசு விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் கிறிஸ்டினா றொக்கா அம்மையார் தெரிவித்துள்ளார்.

ஆசிய பசுபிக் நாடுகளுடனான சர்வதேச உறவுகள் குறித்த உபகுழுவின் முன் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் கருத்துத் தெரிவிக்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரு தசாப்தகால யுத்தம் 2002ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் நிறுத்தப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சியின் ஆதரவுடன் அரசு தொடர்ந்து இயங்கும்

### ஐ.தே.கட்சி எம்.பி.பேட்டி

அரசின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி.தனது ஆதரவை விலக்கிக் கொண்டாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சியின் ஆதரவுடன் அரசாங்கம் தொடர்ந்தும் இயங்கும்.

அரசில் இருந்து ஜே.வி.பி. வெளியேறிய விவகாரத்தை முன்வைத்து நாம் அரசாங்கத்தைக் கவிழ்க்கப் போவதில்லை. இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனரத்தின தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வன்முறைகளை ஒழிப்பதற்கென இரு பிரதான கட்சிகளும் ஒருமித்துச் செயற்படுவதில் ஆர்வம் காட்டுவது முக்கிய விடயம் என்று சிங்கப்பூரில் இயங்கி வரும் ஆய்வு நிறுவனத்தின் பயங்கரவாத ஆய்வுப் பிரிவுத் தலைவர் ரோஹான் குணரத்ன தெரிவித்தார்.(ந)

# ஜே.வி.பிக்கு பயப்பட மாட்டேன்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் இருந்து ஜே.வி.பி.விலகியபோதும் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

எனினும் பாராளுமன்றத்தில் மட்டுமே அரசின் ஒருசில ஆசன எண்ணிக்கை குறைத்திருக்கின்றது. என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்புப் பற்றி நாட்டு மக்களுக்கு விளக்கும் வகையில் ஜனாதிபதி மாளிகையில் இருந்து செய்மதி மூலம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தற்கொலை குண்டுத்தாக்குதலில் தப்பிய நான் ஜே.வி.பியினருக்கு பயந்தோ அன்றி ஒருசில பௌத்த மதவாதிகளுக்குப் பயந்தோ நாட்டிற்குச் செய்யவேண்டியதைச் செய்யாமல் விடப்போவதில்லை.

அந்த வகையில் பொதுக்கட்டமைப்பை கைச்சாத்திடாமல் அதனை ஒருபோதும் விட்டுவிடமாட்டேன். சுனாமியால் ஏற்பட்ட அழிவிற்கான நிவாரணப்பணியை நாம் முன்னெடுக்கவில்லையாயின் நாட்டின் மக்கள் அனைவரும் ஜனாதிபதியாகிய என்னிலும் அரசியல் கட்சிகளிலும் நம்பிக்கை இழந்துவிடுவார்கள்.

இந்நிலை நாட்டில் ஒரு சர்வாதிகாரத்தையோ அன்றி இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவதற்கோ வாய்ப்பாகிவிடும்.

எனவே இந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பினை தொடர்ந்தும் முன்னெடுப்பேன் என்றும் ஜனாதிபதி தனது உரையில் உறுதிபடக் கூறினார். (ந-4)



EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனம் ஒன்றி வழிபட உள்ளம் தூய்மை பெறும்!

## வெள்ளி நற்சிந்தனை

மக்கள் கோவில்களுக்குச் செலவதும் வழிபாடுகள் செய்வதும் நாம் அன்றாடம் காணக் கூடிய நிகழ்



வாக உள்ளது. இப்படி ஆலய வழிபாடுகளுக்குச் செல்பவர்களில் மனம் ஒருமித்த உள்ளன்புடன் கூடிய வழிபாடுகள் செய்பவர் எத்தனை பேர்? என்பதைப் பற்றி நாம பார்ப்போமானால் உண்மையில ஒரு சிலராகவே காணப்படுவர்.

இத்தகைய வழிபாடு தாம் ஊருக்கும், உலகுக்கும், கோவில் வழிபாடு செய்பவர்கள் என்பதைப் பறை சாற்றுவதாகவே இருக்கும். அன்றி வழிபாட்டின் நற்பலனை இதனால் பெற முடியாது. உடலாலும், உள்ளத்தாலும் தூய்மையில்லாதவர்கள் எவ்வளவு தான் வழிபாடுகள செய்தாலும் அது பயன் தராது. தூய்மையான மனம் ஒருமிதத இறைவழிபாடு தான் பலன் தரவல்ல தாகும்.

உள்ளத் தூய்மையுடையவர்களே உலகில் பிறா துன்பங்கண்டு நெகிழ்பவர்களாயிருப்பர். இந்தத் தூய உளப்பாங்கே மனிதனை இறைபக்தி உடையவனாக்குவது ஏழைகளிடமும் நோயாளிகளிடமும், பலவீனமானவர்களிடமும் தெய்வதைக் காண்பவன் தான் உண்மையில் இறை வழிபாட்டிலும் உறுதியுடையவனாயிருப்பான்.

இறைவனும் உள்ளத்தூய்மையுடனும், மன ஒருமைப்பாட்டுடனும் வழிபடுபவர்கடகே அனுக்கிரகம செய்வார். சுயநலமும் பிறரை நேசிக்காத மனமும் கொண்டவன் செய்யும் இறைவழிபாடு - வழிபாடு ஆகாது.

இதனை நாம் எமது அன்றாட வாழ்கையில் பார்க்கவும், அறியவும் முடிகின்றது. தினமும் ஆலய வழிபாடுகளிலும் கோவில், கோவில் என்று ஊர் தோறும் திரிவதிலும் நாட்டமுடையவர்களை விட தன் கடமையைச் சரிவரச் செய்பவர்களும், பிறர் துன்பங்கண்டு துவழ்பவர்களும் இறைவனின அனுக்கிரகத்தினாற் பெரும பாக்கியங்களைப் பெறுகின்றனர்.

காசியாத்திரை, கைலாய யாத்திரை, புண்ணியத் தல வழிபாடுகள் என்றெல்லாம் சென்று வருபவர்களைவிட, ஊரில் அப்பாவிகளாக எல்லாம் அவன் செயலே எனும பூரண நம்பிக்கையுடன் வாழ்பவர்கள் தான் உண்மையான இறையருளுக்குப் பாத்திரமாக வாழ்கின்றனர். இவர்களின் உள்ளங்களிலே தான் இறைவனும் கோவில் கொண்டிருப்பான்.

இதனை நன்குணர்ந்த ஒரு சித்தர் மிக அழகாகப் பின்வருமாறு கூறுகின்றார்.

"நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு மந்திரஞ்சொல்லியே சுற்றிச் சுற்றி முணு முணு என்று சொல்லு மந்திரம் ஏதடா? நட்ட கல லும் பேசுமோ நாதன் உன் உள் இருக்கையில்"

### நீர்வைமணி

எனவே இறைவழிபாடுகளிலும ஆலய தரிசனங்களிலும் நாம் எம் மனதைத் தூய்மைப்படுத்தி வைததிருப்பது அவசியமாகும் தூய்மையற்ற எந்தச் செயலும் துன்பத்தையே விளைவிக்கவல்லது.

" அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாருமறிந்திலார்
அன்பே சிவமாவதாருமறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே" □


## சிறுவிளம்பரம்

### மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
**இரவு 8.30 வரை**

(9567)

### புதிய புத்தகம்

விற்பனையில் சாதனை செய்த 'இது இந்துமதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பு,சைகள் தமிழாக வேண்டும்' விலை ரூபா 80/=

பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி 222 2365

(9599)


# சிறார்களின் முன்னேற்றத்துக்கு பராமரிப்பு நிலையங்கள் முன்னின்று உழைக்கவேண்டும்

### தென்மராட்சி அ.சு.பொறுப்பாளர் ஈஸ்வரன்

மேற்கு நாடுகளில் பராமரிப்பு இல்லங்களில் பிள்ளைகள் சிறப்பாகப் பராமரிக்கப்படுகின்றார்கள்.

ஆனாலும் எமது நாட்டில் சிறந்த போசாக்கு அற்ற நிலையிலும் கூட இவை போன்ற பல பராமரிப்பு நிலையங்கள் சிறநத முறையில இயங்குவது பாராட்டப்படவேண்டியதே என்று தென்மராட்சிப் பிரதேச செயலர் செஹ்ரீனிவாசன் தெரிவித்தார்.

அண்மையில் சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்ற வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில்பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வடகிழக்கில நிறுவன ரீதியாகப் போதிய ஆதரவு வழங்கப்படாத நிலையிலும் சிறந்த முறையில் இயங்கிவருகின்றன. கட்டமைப்பு ரீதியாக உதவிகள் வழங்க விடப்பட்ட கோரிககைகளும் இதுவரை பாரிய அளவில முன னெடுககப்படவில்லை. அப்படி பாரிய உதவிகள் வழங்கப்படுமிடத்து மேற்குலக நாடுகளைப் போல் இன்னும் சிறந்த முறையில் முன்னேற்றிச் செல்லலாம் என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ஈஸ்வரன் தனதுரையில்,

எமது விடுதலைப் போராட்டம் இன்றைய தலைமுறையுடன் முடிவுகுக் கொண்டுவரப்பட்டு இன்றைய சிறார்களின் கையில் சகல நிர்வாகக் கட்டமைப்புக்களின் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுபபும் ஒப்படைக்கப் படவேண்டியுள்ளது.

அதனைக் கருத்தில் கொண்டு இன்றைய சிறார்கள் உடல், உள, கல்வியில் மேம்பாடாக வளர்க்கப்பட இப் பராமரிப்பு நிலையங்கள் முன்னின்று உழைக்கவேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகளை அவர்களின் போக்கில் விட்டுவிடாது அவர்கள் நல்லவழியில் செல்ல உந்து துணையாக இருந்து பராமரித்து வந்தால் பல சமூகச் சீர்கேடுகளைத் தவிர்க்கலாம் என்றார்.

இறுதியில் மாணவர்கள் சான்றிதழும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (அ-29)

## இராசி பலன்

**17.06.2005**
**(ஆனி 03, வெள்ளிக்கிழமை)**
**தசமி பிற்பகல் 4.50 மணிவரை**
**சித்திரை பின்னிரவு 12.48 மணிவரை**
**இராகுகாலம் 10.23 -11.53 மணிவரை**
**சுபநேரம் 5.53 - 7.23 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும், அபூர்வ சந்திப்பு, போசன சுகம். |
| இடபம் | தெய்வ சிந்தை, தொழில் விருத்தி, நல்ல முயற்சி, பணவருவாய். |
| மிதுனம் | கௌரவக் குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், ஆரோக்கியக்குறைவு, குடும்பக் கவலை. |
| கடகம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், ரோக நிலை, புதிய விடயம். |
| சிங்கம் | பெருமுயற்சி, போசன சுகம், உறவினர் வருகை, கீர்த்தி. |
| கன்னி | கடின வார்த்தை, காரிய இடையூறு, தெய்வ சிந்தை, பண விரயம். |
| துலாம் | நண்பர்கள் உதவி, தெய்வ தரிசனம், விருந்துபசாரம், தேகநலன். |
| விருச்சிகம் | இடமாற்றம், சுப செலவு, காரிய இடையூறு, சயன சுகக்குறைவு. |
| தனுசு | கீர்த்தி, தொழில் வருமானம், எடுத்த கருமங்கள் கைகூடும், குடும்ப சுகம். |
| மகரம் | அதிக பிரயாசை, தெய்வ தரிசனம், போசன நன்மை, புதிய தகவல். |
| கும்பம் | புதிய திட்டமிடல், முயற்சி தாமதம், சரீரப் பிரயாசை, பிரயாணம். |
| மீனம் | நண்பர்கள் விரோதம், காரிய தாமதம், உடல் நலக்குறைவு, பிறருக்கு உதவுதல். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வள்வன்

## மீண்டும் உருவாகும் சிஹல உறுமய

(கொழும்பு)

சிங்களப் பேரினவாதக் கட்சிகளுள் ஒன்றான ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்துள்ள ஒரு பிரிவினர் மீண்டும் சிஹல உறுமயவை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளனர்.

சரத் மனமேந்திரா தலைமையில் சிஹல உறுமய மீண்டும் உருவாகும் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த தேர்தலின் போது மகா சங்கம் கேட்டுக் கொண்டதன் பேரில் சிஹல உறுமய ஜாதிக ஹெல உறுமயவுடன் இணைந்தது.

ஆனால் சிங்கள மக்களின் அபிலாஷைகளை, விருபங்களை ஜாதிக ஹெல உறுமய நிறைவேற்றவில்லை என்பதாலேயே மீண்டும் சிஹல உறுமயவை உருவாக்குகிறோம் என்று சரத் மனமேந்திரா தெரிவித்துள்ளார்.

குறப்பாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் அத்துர லியரத்ன தேரர், சம்பிக்க ரணவக்க ஆகியோரின் நடவடிககைகளல் மனமேந்திரா அதிருப்தி அடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்களின் நடவடிக்கை முன்னைய சிஹல உறுமயக் கட்சியின் செயற்பாடுகளுக்கு எதிராக இருக்கிறது என்று மனமேந்திரா தெரிவித்துள்ளார். (அ-4)


## கூறு விலை விற்பனை (Sealed Tender)

### வட பிராந்திய போக்குவரத்துச் சபை-யாழ் சாலை

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் இருந்து கழிக்கப்பட்ட பின்வரும் உதிரிப்பாகங்கள் கூறு விலை விற்பனைக்காக யாழ் சாலையில் விடப்பட்டுள்ளன.

உடைந்த வில்லுத்தகடுகள், இரும்பு வகைகள், அலுமினியம், பாவித்த ரபர், ரியூப், பிளப், அடிச்சட்டம் போன்ற பொருட்களாகும்.

மேலே கூறப்பட்ட பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் 20.06.2005 இற்கு பின்னர் 'வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ் சாலையில்' சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய வேலை நாட்களில் காலை 9.30 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பார்வையிட அனுமதிக் கப்படுவர். மேலும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 1000/- உம், மீளளிக்கக் கூடிய வைப்புத் தொகையாக ரூபா 25,000/- உம் எமது பிராந்தியக் கணக்காளர், வ.பி. போ.சபை கேண்டாவிலில் செலுத்தி பற்றுச்சீட்டை பெற் றுக்கொள்ள வேண்டும். தங்கள் கூறுவிலைக் கோரிக்கை களை அனுப்புவதற்கான விண்ணப்பப் படிவங்களை பலாலி வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள வட பிராந்திய போக்கு வரத்துச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் விநியோக உத்தியோகத்தரிடம் பெற்றுக் கொள்ளவும். கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 08.07.2005 க்கு முன்னர் தலைவர், கூறுவிலைச் சபை, வ.பி.போ.சபை, பலாலி வீதி கோண்டாவில் சாலை என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். 10.07.2005 காலை 10.00 மணிக்கு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் பொழுது வ.பி. போ.சபை தலைமைக் காரியாலயத்திற்கு தாங்கள் சமுக மளிக்க வேண்டும். இப்பொருட்கள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்கப்படமாட்டாது. பொருட்களின் பெறுமதியின் 25 % இற்குரிய பணம் உடன் செலுத்தப்படுவதுடன் மிகுதிப்பணம் ஒருவார காலத்திற்குள் செலுத்தப்பட்டு இக் காலப்பகுதியில் பொருட்கள் சாலை வளவினுள் இருந்து எடுத்துச் செல்லப் படல் வேண்டும்.

தலைவர் கூறுவிலைச்சபை,
வ.பி.போ.சபை,
கோண்டாவில்.

(C/1345)


மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்

* மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
* சித்திரப் போட்டி
* புகைப்படப் போட்டி
* சிறுகதைப் போட்டி

பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்
விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.

# இன்று ஒரு தகவல்

## பக்தியும் பகல்வேஷமும்

ஒரு ஊரில் ஒரு சாமியார் இருந்தார். அவரைச் சுற்றி ஏகப்பட்ட கூட்டம் கடவுளைப் பற்றி அந்த சாமியார் நிறையக் கதைகள் எல்லாம் சொல்வார், சுற்றியிருக்கும் கூட்டமும் அதை மிகவும் ஆவலாகக்கேட்டுக் கொண்டிருக்கும் நமது ஊரில் பக்தர்களுக்கா பஞ்சம். இதைக் கேள்விப் பட்ட கடவுளுக்கே மனதிற்குள் மிகவும் பெருமையாக இருந்தது.

"நமது பெருமையை எடுத்துச் சொல்வதற்கும் பூலோகத்தில் பலபேர் இருக்கிறார்கள். அதைக் கேட்பதற்கும் நிறையப் பேர் இருக்கிறார்கள். மக்களிடம் கடவுள் பக்தி நிறைய இருக்கத்தான் செய்கிறது" என்று நினைத்தார். "சரி! நேரிலேயே அங்கே போய் எல்லோரையும் பார்த்துப் பேசிவிட்டுவரலாம்" என்று நினைத்து அங்கிருந்து புறப்பட்டு பூலோகத்துக்கு வந்துசேர்ந்தார்.

அவர் இங்கே வந்துசேர்ந்த நேரம் மிகவும் நல்ல நேரம். ஒரு கோயிலில் ஏதோ விசேஷம். அங்கே அந்தச்சாமியார் பக்திப் பிரசங்கம் செய்துகொண்டிருக்கிறார். மக்கள் எல்லோரும் கூட்டமாக உட்கார்ந்து கொண்டு அதைக் கேட்டுக்கொண்டு இருந்தார்கள். கடவுள் அப்படி இருப்பார் இப்படி இருப்பார் என்று அந்த சாமியார் ஏதோ கடவுளையே நேரில் பார்த்தது போல் வர்ணித்துக் கொண்டிருந்தார்.

கூட்டம் முடிந்து மக்கள் வெளியே வந்தார்க்ள். கோவிலுக்கு வெளிப்பக்கத்தில் ஒரு அரசமரம். அந்தமரத்திற்கு அடியில் உண்மையான கடவுள் நின்று கொண்டிருக்கிறார். வெளியே வந்த ஒரு பக்தர் அவரைப் பார்த்தார். ஆச்சரியப் பட்டார். கடவுளிடம் போனார். "பலே! கடவுள் மாதிரியே மேக்கப் போட்டுக் கொண்டு நிற்கிறாயே! சபாஷ் வேஷப் பொருத்தம் மிகவும் நன்றாக இருக்கிறது" என்றார். கடவுளுக்குத் தூக்கிவாரிப்போட்டது! "என்ன இது? இப்படிச் சொல்கிறாய்? நான்தான் கடவுள்" என்றார் அவர்.

"இதோ பார்... இப்படி என்னிடம் சொன்னதோடு நிறுத்திவிடு. சத்தம் போட்டுச் சொன்னால் உனக்கு மூளைக்கோளாறு என்பது எல்லோருக்கும் தெரிந்துவிடும். அதன் பின் கல்லை எடுத்துவீசுவார்கள். பிறகு என்மீது கோபப்படாதே! அவ்வளவுதான் சொல்வேன்" என்று எச்சரித்தார் பக்தர். "இதோபார்! நான் சொல்வதைக் கொஞ்சம் கேள்" என ஆரம்பித்தார் இவர்.

"நீ சொல்வதை நான் கேட்பது இருக்கட்டும் முதலில் நான் சொல்வதை நீ கேள்! உள்ளேயிருந்து எங்கள் சாமியார் வருவதற்குள் நீ இடத்தைக் காலிசெய் இல்லாவிட்டால் விடயம் விபரீதமாகிவிடும்" என்றார். "யார்? உங்கள் சாமியார் தானே வருகிறார்? வரட்டும்! அவருக்கு என்னை நன்கு அடையாளம் தெரியும். ஏனென்றால் நான் எப்படி இருப்பேன் என்பதை அவர்தானே தினமும் உங்களுக்குச் சொல்கிறார்." என்றார் கடவுள்.

"இது என்ன வம்பாகி விட்டது"? என்றார் அந்தப் பக்தர். கொஞ்ச நேரம் நின்று பார்த்துவிட்டு எல்லாப் பக்தர்களும் கலைந்து போய் விட்டார்கள். அந்த ஒரு பக்தர் மட்டும் உள்ளே சென்று சாமியாரிடம் விடயத்தைக் கூறினார்.

"சாமி..யாரோ ஒருவன் கடவுள் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்து நின்று குழப்பம் செய்கின்றான்" என்றார். சாமியார் கோபமாக வெளியே வந்தார். "ஏனப்பா இப்படி வந்து இங்கே கலாட்டா செய்கிறாய்? பேசாமல் போய் விடு" என்றார். இவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். அவர் கேட்கவில்லை. கடைசியில் ஒரு அறையில் இவரைத் தள்ளிப் பூட்டிவிட்டார்கள்.

கடவுளுக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது. கண்ணை மூடிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தார். நடு இராத்திரி அந்தச் சாமியார் கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்தார். கடவுளின் காலில் விழுந்தார். "கடவுளே! என்னை மன்னித்துவிடுங்கள் காலையிலேயே நீங்கள் யார் என்பதைக் கண்டு கொண்டேன். நீங்கள் தான் உண்மையான கடவுள் என்பதை நான் வெளியே சொல்லியிருந்தால் மக்கள் என்னையும் பைத்தியம் என்று நினைத்து உங்களுடன் சேர்த்து உள்ளே தள்ளியிருப்பார்கள். அதுதான் அப்படி நடந்துகொண்டேன்" என்றார்.

கடவுள் அதன்பின் ஒருவழியாக மேலே வந்து சேர்ந்தார் வந்தபின் கொஞ்சம் கவலையோடு உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் இருந்த அவரது தேவி . "ஏன் இன்னமும் கவலையுடன் இருக்கிறீர்கள். பூலோகத்தில் பக்தர்கள்தானே அப்படி உங்களைச் சரியாக புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்? குருமார்கள்... சாமியார்கள்... உங்களைப் புரிந்து கொண்டு தானே இருக்கிறார்கள்" என்றார். "அந்த சாமியார் தான் எனது கவலைக்குக் காரணம். புரியாத பக்தர்கள் என்னைப் போய்விடு என்று சொன்னார்கள். புரிந்து கொண்டே அந்தச் சாமியாரும் என்னை உடனே போய்விடு என்றார் அதுதான் கவலையாக இருக்கிறது!

என்னை ஏன் போகச் சொல்கிறாய் என்று கேட்டேன். அதற்கு அந்தச்சாமியார் என்ன சொன்னார்? என்று கேட்டார் தேவி. "நீங்கள் இங்கே வந்து விட்டால் என்பிழைப்புக் கெட்டுப்போய்விடும் என்று சொன்னார்" என்றார் மிகவும் சோகமாக.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

# பொதுக்கட்டமைப்பு தொடர்பான நேரடி விவாதத்திற்குத் தயாரா?

## ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்புகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அரச தொலைக் காட்சியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேரடி விவாதத்



துக்கு தயாரா என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தினரின் நிகழ்ச்சியில் பங்கேற்ற விமல் வீரவன்ச அங்கு பேசுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகர்கள் அவருக்கு தவறான வழிகாட்டுதலை மேற்கொள்கின்றனர்.

அவர் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட முடிவு செய்த தற்கு அவரது ஆலோசகர்களே காரணம்.

பொதுக்கட்டமைப்பு நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது என்று கருதுகிறோம்.



பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதற்காகத் தன் உயிரையும் கூட தியாகம் செய்யத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

கடந்த தேர்தலில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அவர் உயிர்த் தியாகம் செய்ய வேண்டும். ஸ்ரீலங்கா அரசின் தொலைக் காட்சி பக்கச்சார்புடனேயே ஜனாதிபதியின் குரலையே வெளிப்படுத்துகிறது. பொதுக் கட்டமைப்புத் தொடர் பான நேரடி விவாதத்துக்கு ஜனாதபதி தயாரா? என கேள்வி எழுப்பியுள்ளார். (ற)

# ஜனாதிபதி-சோமவன்ஸ இருவரில் பிரதமர் மஹிந்த யார் பக்கம்?

## வினாவெழுப்புகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசாங்கத்துக்குள்ளேயே இன்னும் முரண்பாடுகள் இருக்கின்றன. இதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முக்கியமானவர் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் அரசாங்கம் இன்னும் ஆவணங்களை வெளியிடவில்லை. இந்த நிலையில் அரசாங்கத்திற்குள் இதுகுறித்து முரண்பட்ட பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டிருக்கின்றது. பிரதமமந்திரி ராஜபக்ஷ இன்னமும் தமது நிலைப்பாட்டினை வெளியிட மறுத்து வருகிறார்.

இந்த நிலையில் தான் ஜனாதிபதியின் பக்கம் சார்ந்திருக்கின்றாரா? அல்லது சோமவன்ஸவின் பக்கம் சார்ந்திருக்கின்றாரா? என்பதைப் பிரதமர் வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி சவாலை முன்வைப்பதாகவும் கயந்த கருணா திலக அம் மாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# சகல வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் தானியங்கித் துப்பாக்கி வழங்க நடவடிக்கை

வனப்பாதுகாப்பு அதிகாரிகளைப் பாதுகாக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட இருப்பதாக சுற்றாடல் இயற்கைவள அமைச்சர் ஏ.ஜே.எம்.பௌஸி தெரிவித்துள்ளார். எதிர்காலங்களில் வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ரி.56ர்க தன்னியக்க துப்பாக்கிகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நவீன தொலைத்தொடர் உபகரணங்களை அனைத்து வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் பௌஸி தெரிவித்தார். நேற்று முன்தினம் ஜால வனப் பாதுகாப்பு அதிகாரிகளின் அலுவலகத்திற்குச் சென்ற சிலருக்கும் வனப்பாதுகாப்பு அதிகாரிகள் சிலருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பாகக் கேட்டபோதே அமைச்சர் இதனைத்தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இந்த மோதலில் வனப்பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதன் போது சுமார் 15 பேர்வரை காயமடைந்துள்ளனர்.

திஸ்ஸமகராம, ஹெரவரக, உற்பதனாவ ஆகிய பிரதேசங்களில் வயல் ஒன்றில் யானைதாக்கி ஒருவர் உயிரிழந்ததால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மோதல் சம்பவம் தொடர்பாக 13 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (அ-2)

# இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற 7 ஆயிரத்துக்கு அதிகமானோருக்கு

## சட்டரீதியான அனுமதி

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பிச்சென்ற சுமார் 7ஆயிரத்திற்கு அதிகமானோர் கடந்த காலங்களில் சட்டரீதியாக இராணுவத்திலிருந்து விலகிச் சென்றுள்ளதாக இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

கொழும்பு மலே வீதியில் ஆள்சேர்ப்புப் படையணி அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை மாத்திரம் 631 பேர் சட்டரீதியாக விலகிச் சென்றுள்ளதாக தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

பல்வேறு காரணங்களினால் இராணுவத்திலிருந்து தப்பியோடிய மற்றும் இராணுவப் பயிற்சிகளின் போது இடைநடுவில் விட்டுச்சென்றவர்களுக்கு சட்டரீதியாக விலகுவதற்கு இராணுவத் தலைமையகம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை பலாங்கொடை இராணுவமுகாம் ஊடாக மாத்திரம் 6 ஆயிரத்து 301பேர் சட்டரீதியாக விலகிச் சென்றுள்ளதாக தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதிவரை ஆயுதப் படைப்பிரிவு, விசேடப் படைப்பிரிவு, பொலிஸ் சேவைப் படைப்பிரிவு, வைத்தியப் படைப்பிரிவு, புலனாய்வுப் பிரிவு, மின் பொருளியல் படைப்பிரிவு, மகளீர் படைப்பிரிவு ஆகிய படையணிகளில் இருந்து தப்பியோடிய இராணுவ வீரர்களுக்கு சட்டரீதியாக விலகுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் மேலும் தெரிவிக்கின்றது.

இவ்வாறு தப்பிச்சென்றவர்களுக்கு எதிர்வரும் 24ஆம் திகதிவரை கொழும்பு மலேவீதியில் அமைந்துள்ள ஆள்சேர்ப்பு படையணிப்பிரிவில் சட்டரீதியாக விலகிச்செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (அ-9)

# அரசாங்கப் பாடசாலைகளில் புள்ளி விபரத்தொகை மதிப்பீடு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் புள்ளிவிபரத் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மத்திய மற்றும் மாகாணக்கல்வி அமைச்சுக்களின் கீழ் செயற்படும் சகல அரசாங்கப்பாடசாலைகளிலும் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல்.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலைக்கல்வி தொடர்பாக எதிர்காலத்திட்டமிடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக இந்தத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சின் புள்ளிவிபரக்கிளை மேற்கொண்டுள்ளது. இதன்படி, ஜூன் கடந்த முதலாம் திகதி உள்ளவாறான அனைத்து விபரங்களும் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

எந்தவொரு பாடசாலைகளினதும் ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பௌதிக வளங்கள் தொடர்பாக அனைத்துத் தகவல்களையும் சேகரிக்கும் வகையிலான படிவங்களை கல்வி அமைச்சு விநியோகித்துள்ளது. தற்காலிகமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் மதிப்பீட்டு நடவடிக்கைகளை கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது. . (ற-8)

## கலந்துரையாடல்

(யாழ்பபாணம்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் தனது 20வது ஆண்டு நிறைவினை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொண்டாடவுள்ளது.

இதனையொட்டி சிறப்புமலர் ஒன்றை வெளியிடுவது தொடர்பான பழைய மாணவர்கள் மற்றும் உறுப்பினர்களுடனான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப3.00 மணிக்கு மாலுசந்தியில் உள்ள அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல பழைய மாணவர்களையும், உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கழகத் தலைவர் சி.குலசிங்கம் கேட்டுள்ளார்.

பழைய மாணவர்கள், உறுப்பினர்கள் வரமுடியாதவிடத்து அவர்கள் சார்பாக பெற்றோரில் ஒருவர் கலந்துகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சோக சோபித சொர்ணக் கவிக்குயில் அரியாலை வி.கே.இரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாபூசணம் செல்லையா மெற்றாஸ் மெயில் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், நினைவுச் சுடரை கலைஞர் பிலிப் ஜோன் கவாஸ் ஏற்றிவைக்க கலாபூசணம் க.உருத்திராபதி உருவப்படத்துக்கு மாலை அணிவிப்பார்.

தொடர்ந்து, நினைவஞ்சலி உரைகளை பேராசிரியர் சு.மோகனதாஸ், கலாநிதி அ.சண்முகதாஸ், நடிக கலாமணி வ.செல்வரத்தினம், நா.விமலநாதன், கலாநிதி த.கலாமணி, சி.சிவதாசன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி மற்றும் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ற)

## பயிர்களைக் காப்பாற்ற முட்கம்பி வேலி

(மருதங்கேணி)

சாவகச்சேரி மறவன்புலோ பகுதியில் புதிதாக நெல் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிர்ச் செய்கையைக் கால்நடைகளிலிருந்து காப்பாற்றுவதற்காக முட்கம்பி வேலிகளை அமைக்க பட்டினிக்கெதிரான நிறுவனம் 2 இலட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 85 றோல் முட்கம்பிகளை கமக்கார அமைப்பிடம் வழங்கியுள்ளது என கைதடி கமநலசேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (து-35)

## ஈ.பி.டி.பி.உறுப்பினர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியாவில் ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினர் ஒருவர் கைக்குண்டு ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வவுனியா காமினி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக இவர் கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11ஆம் திகதி கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற முகாமிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிளைமோர் தாக்குதல் நடைபெற்ற முகாமிற்கு மேலதிகமாக இராணுவத்தினரும், பொலிஸாரும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். (ற-4)

## வித்யா குருகுலத்திற்கு டக்ளஸ் 2 லட்சம் உதவி

(கொழும்பு)

கொழும்பு - முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்திவிநாயகர் ஆலய வளாகத்தில் அந்தண சிறுவர்களுக்கான வேத, ஆகம, சிங்கள, கணனி பாடங்களை ஸ்ரீவித்யா குருகுலம் சனி, ஞாயிறு தினங்களில் நடாத்தி வருகின்றது. குருகுல மாணவர்கள் அமைச்சு அலுவலகத்தில் தமது தேவை குறித்து அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடினர்.

குருகுல பணிகள் அபிவிருத்திக்கு பீட செயலாளர் இராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மாவின் நிதியுதவி பற்றிய கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் ரூபா இரண்டு லட்சத்திற்கான காசோலையை அமைச்சு அலுவலகத்தில் வைத்து குருகுல மாணவர்களின் முன்னிலையில் வழங்கினார். (அ)

# யாழில் முதன்முறையாக நடந்த விரைவு நகர்த்தல் சதுரங்கப் போட்டி



(யாழ்ப்பாணம்)

கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற விரைவு நகர்த்தல் சதுரங்கப் போட்டியில் (Rapid Chess Tournament) சர்வதேச தரப்பட்டியல் வீரர் ஒருவர் உட்பட பலரும் பங்கேற்றிருந்தனர்.

இவ்வாறான போட்டியொன்று யாழ்.மண்ணில் நடாத்தப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்போட்டியில் ஆரம்பம் முதல் சதுரங்கப் பயிற்சி பெற்ற வீரர்கள் விளையாடினர். ஒருவருக்கு தலா 30 நிமிடங்கள் என வழங்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டதனால் வீரர்கள் விறுவிறுப்பாக விளையாடினர். இப்போட்டியானது நொக அவுட் போட்டியாக நடத்தப்பட்டது.

இப்போட்டியில் ஆண், பெண் இருபாலாரும் வயது வித்தியாசமின்றி கலந்துகொண்டனர். இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் ஹரி கஸ்பரோவ் சதுரங்க அக்கடமி செய்திருந்தது.

இப்போட்டியினைத் தொடக்கி வைத்து உரையாற்றிய சி.வித்தியாதரன் தமதுரையில்,

இவ்வாறான போட்டிகள் யாழ்மண்ணில் நடைபெறுவது இதுவே முதல் தடவை என்றும் அத்துடன் இப்போட்டிக்காக யாழ். கல்வி வலயத்தின் பிரபல பாடசாலைகள் சதுரங்கக் கழகங்களை வழங்கியதன் மூலம் போட்டியினை சிறப்பாக நடத்தக் கூடியதாகவிருந்தது எனவும் குறிப்பிட்டார்.

இப்போட்டியின் அனைத்து ஆட்டங்களிலும் வென்றதன் மூலம் விரைவு நகர்த்தல் சதுரங்க சம்பியனாக வீ.ரீ.எஸ் சிவேதுகன் தெரிவு செய்யப்பட்டார்.

இதில் இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களை முறையே எஸ்.வல்லவக் குமாரன், ரி.திவாகரன், ரி.திரோஜன், என்.சோதிநாதன் ஆகியோரும் ஆறாம், ஏழாம், எட்டாம், ஒன்பதாம் இடங்களை முறையே எஸ்.செல்வ விநாயகம், என்.கௌஷிகா, பி.இராஜீவன், ஏ.இரதன் ஆகியோரும் பெற்றனர்.

இப்போட்டியின் ஆரம்ப வைபவமாக ஹரி கஸ்பரோவ் சதுரங்க அக்கடமியில் பயிற்சி பெற்ற சதுரங்க பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இச்சான்றிதழ்களை யாழ்போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணரும் சதுரங்க வீரருமான என்.ஜெயக்குமாரனும் சதுரங்க அக்கடமியின் முகாமைத்துவப் பணிப்பாளர் சி.வித்தியாதரனும் வழங்கிக் கௌரவித்தனர். (ற)

# சட்ட விரோதமாகத் தங்கியுள்ள வெளிநாட்டவர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

விசா காலாவதியான பின்னரும் சட்ட விரோதமாக இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை தொழில்களில் அமர்த்தும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறு விசா காலாவதியான வெளிநாட்டவர்களை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கடும் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் பி.டி.அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களை தொழில் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்படுபவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்த பின்னர் நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பி.டி.அபயக்கோன மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# வடபகுதி முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்தை அனுமதிக்கவும்

### அமைச்சர் றிஷாத் பதியுதீன் கோரிக்கை

(கொழும்பு)

வடமாகாண முஸ்லிம்கள் தங்களது மீள் குடியேற்றத்தை ஆரம்பித்துள்ள நிலையில் சர்வதேச சமூகமும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என வேப்பமடு நகமத் நகரில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் றிஷாத் பதியுதீன் கேட்டுக்கொண்டார்.

மன்னாரில் முசலியைச் சூழவுள்ள பரதேசத்தில் 3 கோடி 50 லட்சம் ரூபா செலவில் மின்விநியோகத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும்,

முருங்கன் தொடக்கம் அரிப்புத்துறை வரையிலான வீதி புனரமைக்கப்படுகின்றது என்றும், மீளக்குடியேறியுள்ள 160 குடும்பங்களுக்கான கல்வீடுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும்1000 குடும்பங்கள் மீளக் குடியேறத் தயாராக இருப்பதனால் அவர்களுக்கான வீடமைப்புத்திட்டத்துக்காக 25 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்றும் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

தேசிய இயந்திர உபகரணங்கள் கூட்டுத்தாபனத் தலைவர் எம்ஜஎம்அன்வர் உட்பட பலர் அக்கூட்டத்தில் சமுகமாயிருந்தனர். (து-2)

# ஆட்சியைத் தக்கவைப்பதா? மக்களைக் கவனிப்பதா?

### திண்டாட்டத்தில் அரசு

(கொழும்பு)

1976ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி அரசாங்கம் எதிர்நோக்கிய நிலையைப் போன்றே தறபோதைய அரசாங்கமும் தற்போது எதிர்நோககியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொதுக்கட்டமைப்பு என்ற ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த முனைந்ததன் மூலம் முழு நாட்டின் கட்டமைப்பும் செயல் இழந்து இருக்கின்றது.

இந்நிலையில், எந்த நேரத்திலும் கவிழ்ந்து விடலாம் என்று இருக்கும் அரசாங்கம் நாட்டை எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்பும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில தற்போது பொருட்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. இந்த அரசாங்கம் ஆட்சியைக் கவிழ விடாமல் பாதுகாப்பதா? அல்லது பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதா? என ஓர் இக்கட்டான நிலையில் அரசாங்கம் இருக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-8)

## பயிற்சிப் பட்டறை

(சில்லாலை)

திருநகர் யா/சென்றோக் பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணி தொடக்கம் பி.ப 5:00மணிவரை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரால் நடாத்தப்பட்ட முழுநேர பயிற்சிப் பட்டறையில் முப்பது சிறுவர்கள் பங்கு கொண்டனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடன் இணைந்து மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு இப்பிரதேசங்களில் திட்டங்களை மேற்கொள்வதற்காக சுமார் ஒரு மாதகாலமாக வீடுகள தோறும படிவங்கள் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து குருநகர், திருநகர் பகுதிகளில் மேலும் 5 பயிற்சிப் பட்டறைகள் இடம்பெற உள்ளன. இரண்டாவது தொகுதி மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது பயிற்சிப்பட்டறையில் இட நெருககடி, வீட்டில் ரி.வி பார்த்தல் போன்றவற்றால் கல்வி பாதிக்கப்படுதல், மதுபாவனையில் பிள்ளைகளின் மனநிலை போன்ற காரணங்கள் வெளிப்படையாகத் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (து-58)

## பெண்களுக்கு கடன் வழங்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தனது திட்டங்களில் ஒன்றாக பெண்கள் அபிவிருத்தித்திட்டத்தினை தென்மராட்சிப் பிரதேச கிராமங்களை உள்ளடக்கியதாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் பெண்களின் சுய தொழில் முயற்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு கடன்வழங்கும் திட்டத்தினை செயற்படுத்தி வருகின்றது.

இதனடிப்படையில் கைதடி மேற்கு கிராம மாதர் அபிவிருத்திச் சங்க பயனாளர்கள் 8 பேர் (5000-8000) சுயதொழில் அடிப்படையில் கடன் தொகையை கடந்த செவ்வாயன்று பெற்றனர்.

இந்நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தே.தேவானந், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திட்ட உத்தியோகத்தர் ஆர்.சுஜித்தா, கைதடி மேற்கு கிராம சேவையாளர் சு.செல்வராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (து)

## வேரடிமண் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கரம்பைக்குறிச்சி மேற்கு மாதர் சங்கமும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடாத்தும் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவான வேரடிமண் நிகழ்வு நாளை 1.30 மணியளவில் கரம்பைக்குறிச்சி மேற்கு பாலர் மைதான முன்றலில் மாதர் சங்கத் தலைவி அ.ஜெயராணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உமாபாலனும், சிறப்பு விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவன திட்ட உத்தியோகத்தர் ஆர்.சுஜித்தா, கரம்பைக்குறிச்சி கிராம சேவையாளர் திருமதி.இ.மனோகரன், எஸ்.கந்தசாமி, அகதிகள் புனர்வாழ்வு நிறுவன முன்னாள் திட்ட உத்தியோகத்தர் செல்வி.நா.ஜெயந்தி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (து)

## இராஜினாமா இல்லை

### -ரெஜினோல்ட் கூரே

மேல் மாகாண சபை முதல்வர் பதவியிலிருந்து ஒருபோதும் இராஜினாமா செய்யப் போவதில்லை என ரெஜினோல்ட் கூரே அறிவித்துள்ளார்.

முதலமைச்சர் பதவியை இராஜினாமா செய்யும் ரெஜினோல்ட் கூரேவுக்கு ஊடக அமைச்சுப் பதவியை வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளதாக வெளியான செய்திகளையும் அவர் நிராகரித்துள்ளார்.

இருந்தபோதும் தனக்கு அமைச்சுப் பதவி கொடுப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பரிசீலித்து வருவதாக ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார். (ற-4)

## சொற்பொழிவு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடாத்திவரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு பெரிய புராணத் தொடரில் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். (ற-35)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

**18** தினமணிக்குச் சென்ற நான் ஆதிகேசவன் பற்றிய செய்தியை எழுதி ஆசிரியரிடம் கொடுத்தேன். மறு நாள் சென்னை உயர்நீதிமன்றத்திற் குச் செல்லுமாறு ஆசிரியரின் பணிப்புக் கிடைத்தது.

மேலீதிக விபரங்களுக்காக செய்தி யாளர்களுக்குப் பொறுப்பாக இருக்கின்ற திரு.ரங்கராஜனுடன் தொடர்பு கொள்ளு மாறும் அவர் தெரிவித்திருந்தார்.

அவரின் கட்டளைகளுக்கு அமை வாக ஆசிரியர் பீடத்திற்கு எதிரே உள்ள அறையில் இருக்கும் திரு.ரங்கராஜனைச் சந்தித்தேன். அவரே தினமணியின் செய்தியாளர்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றார்.

செய்தி சேகரிப்பதற்காக யார் யார் எந்த இடத்திற்குச் செல்வதென்பதைத் தீர்மானிப்பது அவருடைய பொறுப்பு. மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்படுபவர்.

தன்னுடைய வேலைகளை உடனடியாக நிறைவேற்றுவதில் அவர் காட்டும் ஆர்வம் மெச்சுதற்குரியது. இப்படியல்லவா ஒரு செய்தியாளர் இருக்கவேண்டு மென்பதற்கு அவர் நல்லதோர் உதார ணம். எனினும் அவரிடம் பெரியதொரு குறைபாடும் இருக்கவே செய்தது. தன் னுடைய வேலை எவ்வாறு உடனடி யாக நடைபெற வேண்டுமென எண் ணி னாரோ அதேபோன்று மற்றவர்களு டைய விடயங்களைத் தானும் உடனடி யாகச் செய்து கொடுக்கவேண்டுமென அவர் நினைக்கவில்லை.

யாழ்ப்பாண அரச அலுவலர்கள் போல, எந்த வேலையையும் உடனடி யாகச் செய்து கொடுக்கக் கூடாது. அவ்வாறு செய்து கொடுத்தால் அது தமக்கு மதிப்பைத் தராது என்ற நினைப்பு திரு. ரங்கராஜனிடமும் இருந்திருக்க வேண்டும். இதனால் என்னுடைய அருமந்த நேரத்தில் சில மணி நேரங் களை அவருக்காக வீணே கழித்தேன். இது அவர் மீதான குறைகாணல் அல்ல. இலங்கையிலிருந்து தமிழகத்திற்குச் சென்ற நான், அங்கு ஒவ்வொரு நிமிடத் தையும் பயனுள்ள முறையில் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் எனது தமி ழகப் பயணம் அர்த்த புஷ்டியுடைய தாக இருக்கும் என்ற என் நியாயமான எண்ணப்பாட்டினால் குறிப்பிடப்பட்ட தாகும்.

நேரத்தில் தாமதம் செய்தாலும், வெளிக்களத்தில் நான் செல்ல வேண் டிய பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து தந்தவர் திரு.ரங்கரா ஜன் என்பதை இந்த இடத்தில் நன்றி யோடு நினைவுபடுத்திக் கொள்கின் றேன்.

சென்னை உயர் நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு ஆசிரியர் கூறிய தகவலை ரங்கராஜனிடம் கூறிய போது நீதிமன் றச் செய்தியாளர் திரு. தங்கராஜ ”வை அறிமுகப்படுத்தி, அவரோடு அங்கு செல்லுமாறு கூறினார்.




## சென்னையில் உயர் நீதிமன்றம்

### உயர் நீதிமன்றத்திற்குச் சென்றேன்

என் வாழ்நாளில் பொலிஸ் நிலையத் திற்கும், நீதிமன்றத்திற்கும் செல்லக் கூடாதென்ற உறுதிப்பாடு என் சிறுவய திலிருந்தே என்னுள் முளைவிட்டிருந்தது.

வழக்காளியாக, எதிராளியாக, ஏன்? பார்வையாளராகக் கூட அந்த இரண்டு இடங்களுக்கும் செல்வதில்லை என் பதே என் இலட்சியம்.

ஆனால் அந்த இலட்சியத்தை என் னால் இறுதிவரை கடைப்பிடிக்க முடியா மல் போனமை வேதனைக்குரியது.

என அன்பிற்குரிய முன்னாள் அமைச் சர் ஒருவர் என் இலட்சியத்தை உடைத்துவிட்டார். இந்த மண்ணில் பிறந்த ஒருவன் பொலிஸ் நிலையம், நீதிமன்றம் இவற்றையெல்லாம் போய்ப் பார்க்கவேண்டும். அது நம்மைப் பக்கு வப்படுத்தும் என்ற அனுபவத்தை எனக்கு உணர்த்த அவர் எண்ணினார் போலும். அவரின் உதவியால் முதல் முதலாக யாழ்ப்பாணப் பொலிஸ் நிலை யத்திற்குச் சென்றேன்.

அப்போது யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகராக திரு. குடாஹெட்டி இருந்தார். அவரின் விசாரணை அட, பொலிஸ் நிலையத்திற்கு அடிக்கடி செல்லலாமே என்ற துணிவைத் தந் தது.

அன்று பெற்ற அனுபவம் உயர் நீதிமன்றத்திற்குள் செல்வதற்கு எனக் குப் பேருதவியாக இருந்தது.

மறுநாள் காலை சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் புறப்பட்டேன். 'உயர் நீதிமன்றம்' என்ற பெயர்ப்பலகையுடன் பஸ்சேவை தாராளமாக நடைபெறுவ தால், அங்கு செல்வதில் எந்தக் கடின மும் இருக்கவில்லை.

சென்னை உயர்நீதிமன்றம் (Madras High Court) மிகப் பிரமாண்டமான கட்டடத் தொகுதியைக் கொண்டது. அந்தக் கட்டடத் தொகுதியைச் சுற்றிப் பார்த்துச் சுத்தமாகத் தெரிந்து கொள்ளக் குறைந்தது ஒருவார கால மாவது தேவை. பிரிட்டிஷாரால் 1801 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சென்னை உயர் நீதிமன்றத்தின் முதலாவது நீதி பதியாக HENRY QWILLIM என்ற ஆங்கிலேயர் கடமையாற்றினார். அதே நேரம் ஆங்கிலேயருடைய காலத்தில் முதலாவது நீதிபதியாக இருந்த இந்தி யர் திருவாரூர் சேர் முத்துசுவாமி ஐயர் (1878 -1895) இவருடைய உருவச் சிலை நீதிமன்ற அமர்வுகள் நடை பெறும் உயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் முதலாவது மாடியில் அமைக்கப்பட்டுள்ளது.

**என். விஜயன்**

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் முதலாவது உயர் நீதிமன்ற நீதிபதியாக (ChiefJusties) டாக்டர் பி.வி.ராஜ மன்னார் (DR.P.V.RAJAMANNAR) (1948- 1961) பதவி வகித்தார்.

சென்னையிலுள்ளது போன்று கல் கத்தா, பம்பாய், டில்லி ஆகிய இடங்க ளிலும் பிரிட்டிஷாரால் அமைக்கப்பட்ட உயர் நீதிமன்றங்கள் உள்ளன.


காவல்துறை ஆணையாளர் அலுவ லகத்திலுள்ள பிறஸ்ரூம் (Press Room) போன்று உயர் நீதிமன்றத்திலும் பிறஸ் ரூம் உள்ளது.

நீதிமன்றச் செய்தியாளருடன் ஏற் கனவே பேசிக்கொண்டதற்கமைய நீதி மன்றத்திலுள்ள பிறஸ் ரூமுக்குச் சென் றேன். அங்கு செய்தியாளர் தங்கராஜ ” இருந்தார்.

நடுத்தர வயதுடைய அவர், நீதி மன்றச் செய்திகளை எடுப்பதில் மிகுந்த அனுபவமும், தேர்ச்சியுமுடையவர். மென்மையாகக் கதைப்பது அவரின் சிறந்த பண்பின் அடையாளம். என்னைக் கண்டதும் விசாரணை நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். செல்லும் போதே நீதிமன்றத்தின் வரலாற்றை கூறத் தொடங்கிய அவர், கையடக்கத் தொலைபேசி இருந்தால் ஓவ் செய்து கொள்ளுங்கள் என்ற அறிவுறுத தலைத் தந்தபடியே விசாரணை நடைபெ றும் அறையின் கதவைத் திறந்தார்.

(திங்கள் வளரும்)









உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு -கிழக்கு மாகாண வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் வீடு களை அமைத்துக் கொடுப்பதற்கு யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 1000 பயனாளிக ளுக்கு முதற்கட்ட கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, வடக்கு- கிழக்கு மாகாண வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன் உரை யாற்றுவதையும், அரச அதிகாரிகள், பயனாளிகளையும், பயனாளி ஒருவருக்கு முதற்கட்ட கொடுப்பனவுக் காசோலை கையளிக்கப்படுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- ஞா.ஐங்கரன்)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 55

## ஆசிரியரின் அறிவு



திருச்செந்தூருக்கருகில் கொம்மடிக் கோட்டை என்ற ஊரில் ஒரு மகானுடைய சமாதிக் கோயில் இருக்கிறது. ஆவணி மாதத்தில் சிறந்த முறையில் குருபூசை விழாவும், அன்னதானமும் நடைபெறுகின்றன. தருமகுணச் செம்மல் எஸ்.க்ந்தசாமி பாண்டியன் என்ற அன்பர் அதனை நடத்துகின்றார்.

அந்த விழாவிற்குப் பலமுறை சென்று சொற்பொழிவு செய்திருக்கிறேன். ஒருமுறை அந்த விழாவின் பொழுது விரிவுரை செய்யும் பொருட்டுச் சென்றிருந்தேன். நெல்லை மாநகருக்கருகிலுள்ள ஓர் ஊரில் வாழ்கின்ற ஆசிரியர் எனக்குப் பணிபுரிய அங்கு வந்திருந்தார்.

கந்தசாமிப் பாண்டியருடைய வாழ்க்கைத் துணைவியார் மிகுந்த அடியார் பக்தியும், தெய்வ பக்தியும் கொண்டவர். விருந்தோம்பும் திருந்திய உள்ளம் படைத்தவர். தேங்காய் பருமன உள்ள பெரிய 20 அப்பிள்களும், எள்ளுருண்டைகளும பெரிய தட்டில் வைத்து என் முன் படைத்து வணங்கினார்.

எனக்கு கடித்துத் தின்னும் கருவி உறுதியாக இல்லாமையினால் எதிரில் நின்று கொண்டிருந்த ஆசிரியரைப் பார்த்து "இந்த அப்பிள்களில் தோலெடுத்துக் கொடும்!" என்று இரண்டு அப்பிளை அவர் கையில் கொடுத்தேன்.

கநதசாமப பாணடியன, "சுவாம! சமாதிக கோயலைப போய தாிசிககலாம வாருங்கள!" எனறு அழைததா. நான போய காாில ஏறிககொணடேன. அநத ஆசிாியா ஒரு செயதிததாளில மடக்கிய ஒரு பொட்டலத்தைக் கொண்டு வந்து என் கையில் கொடுத்தார். தோலெடுத்த அப்பிள் வழியில் சாப்பிடலாம் என்று எண்ணி வாங்கிக் கொண்டேன்.

காாில போகும பொழுது அநதப பொடடலததைப பாிததுப பார்ததேன.அதில அபபிள தோலகள மடடும இருநதன. எனககு ஒனறும புாியவிலலை. அவர் பொடடலததை மாறறிக கொடுதது விடடாரே எனறு எணணினேன. சமாதிககோயில சென்று தாிசனம செயதுவிடடுத தங்குமிடம் சென்றேன்.

ஆசிரியரைப் பார்த்து "நீ என் கையில் என்ன கொடுத்தாய்?" என்று கேட்டேன். அவர் "தோலை எடுததுக கொடுககுமாறு சொனனாகளே! அதனால தோலகளை எடுததுப பொடடலம செய்து கொடுத்தேன்" என்று கூறினார்.

எனக்குச் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லை. "என்னப்பா! பல் இல்லாமையினால் தோலைச் சீவி அப்பிளையல்லவா தருமாறு சொன்னேன்? நீ அப்பிள் சதையை விடுத்துத் தோலை மடடும எடுததுக கொடுததனையே? உன அறிவின திறம மிகவும நனறு" எனறு கூறிப புன்னகை புரிந்தேன்.

ஒரு சமயம் தஞ்சையில் தொடர் விரிவுரை செய்து கொண்டிருந்தேன். அங்கும் அந்த ஆசிரியர் வந்து எனக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தார்.

தஞ்சைக்கருகிலுள்ள தேவன்குடி என்றி ஊரில் என்னுடைய அன்பர் திரு.சுந்தரேசம்பிள்ளை தனது இல்லத்திற்கு வழிபாடு செய்ய அழைத்திருந்தார். தேவன்குடியில் என்னிடம் பரிவு காட்டும் அன்பர்கள் பலர் வாழ்கின்றார்கள்.

அதிகாலையில் தலையில் தைலம் தேய்த்துக் குளிப்பது வழக்கம். அந்த அறிவுள்ள ஆசிாியரைப பாாதது "அபபா! உளளே போய பிளளையவாகளிடம தைலம இருநதால கேடடு வாங்கிவா!" என்று சொன்னேன். அவர் உள்ளே போய் ஒரு பாட்டிலைக் கொண்டு வந்து எனது உளளங்கையில வடடாா. நான அதைத தலையில வைததவுடன சிலலெனறு இருநதது. எனன என்று கவனித்துப் பார்த்தேன். அது தைலம் அன்று பன்னீர் என்று உணர்ந்தேன். பூசை சாமான்களுடன் இருந்த பன்னீரைத் தைலம் என்று எண்ணி அவ்வாறு செய்தார் என்று அறிந்து சிரித்தேன். இப்படியும் ஒரு அறிவுள்ள ஆசிரியரை இறைவன் படைத்தானே என்று எண்ணி அதிசயப்பட்டேன்.

## வைதவருக்கும் செய்த உதவி

1935இல் வயலூரில் நான் முதன் முறையாகச் செய்த இராஜகோபுரத் திருப்பணியில் துறையூா நா.சௌநதரபாணடியன பிளளை எனபவா சிறபபியாக இருநது பணிபுாிநதாா. அதறகுப பின செனனை குயபபேடடை கநதசாமி கோயிலில நான செயத இராஜகோபுரத திருபபணியிலும ஏனைய திருப்பணிகளிலும் சிற்பியாக இருந்து ஊதியமும், பிற நலன்களும் பெற்று வந்தார்.

என்னிடத்தில் மிகவும் அன்பாகப் பழகிக் கொண்டு வந்தார்.குடும்பத்தில் ஒருவராகவே இருந்து ஆர்வலராக இருந்தார்.

1950 இல வடலூா தூபி நராடடு விழா நடைபெறறது. வடலூர் திருபபணி 1941இல தொடஙகி 1950இல் முடிவுபெற்றது. இந்த 9 வருடங்களிலும் அவர் தான் அத்திருப்பணியில் சிற்பியாக இருந்து பணிபுரிந்து வந்தார். அதில் அவருக்கு தலைக்கனம் ஏற்பட்டுவிட்டது.

தூபி நராடடு விழாவில பணியாளாகளுககுப பாிசுகள வழஙகினேன. நா.சௌந்தர பாணடியன பிள்ளைக்கு 2000 ரூபாய் சன்மானமாகத் தந்தேன். அவர் அடகு வைத்திருந்த கௌரீ சங்கர ருத்ராக்ஷம் முதலிய நகைகளை மீட்டுக் கொடுத்தேன்.

தூபி நராடடு விழாவின மூனறாவது நாள அவா, "நான வடநாடடு யாததிரைககுப போகத திடடமிடடிருககிறேன" எனறாா. நான அவா கழுததிலிருநத தஙகச சஙகிலியுடன கூடியிருநத ருத்திராக்ஷத்தை மறுபடியும் அடகு வைக்கக் கூடாதே என்ற கருணையினால் அதைக் கழற்றினேன். அது அறுந்துவிட்டது. அதை அவர் மனைவியாரிடம் கொடுத்துவிட்டு ஊருக்குப் போய்விட்டேன்.

அவருக்கு ஒரு துர்மந்திரி சேர்ந்தார். அந்த இருவர்களும்.நான் ருத்திராக்ஷத்தை அறுத்துவிட்டேன் என்று என்மீது வசைபாடத் தொடங்கினார்கள்.

ஊர் ஊராக இதே வேலையாகத் திரிந்து எனக்கு வேண்டிய நண்பர்களிடமெல்லாம் என்னைப்பற்றி குறை கூறிக்கொண்டு, ஆலத்தூர் சகோதரர்கள் மாறிமாறிப் பாடுவது போல் என்மீது வசை புராணம் பாடிக்கொண்டு அலைந்தார்கள்.

**வைததனை இன்சொல்லாகக் கொள்வானும் நெய்பெய்த**
**சோறென்று கூழை மதிப்பானும்- ஊறிய**
**கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்**
**மெய்ப்பதம் கண்டுவாழ் வார்.**

இந்த திரிகடுகப் பாடலை இளமையிலே நான் படித்திருக்கின்றேன். (தொடரும்)

# பரீட்சை ஆணையாளராக அனுர எதிரிசிங்க நியமனம்

(கொழும்பு)

பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக அனுர எதிரிசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கல்வி நிர்வாக சேவையின் முதலாம் தர சிரேஷ்ட அதிகாரியாவார்.

புதிய பதவியை கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்று வேலைகளை ஆரம்பித்த அவர் தற்போது நடைபெறும் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிட எண்ணியுள்ளதாகக் கூறியுள்ளார். (அ-2)

# பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தர வீடுகள் பெறும் பயனாளிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில நிரந்தர வீடுகளைப் பெறவுள்ள பயனாளிகளை சந்திக்கும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் புதன்கிழமை 22 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலானது யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்டு நிரந்தர வீடுகளைப் பெறவுள்ள பயனாளிகள் அனைவரும் கல்ந்து கொள்ளவுள்ளார்கள்.

இக் கலந்துரையாடலில் நிரந்தர வீடுகளை அமைப்பதில் பயனாளிகளது விருப்பம், நிரந்தர வீடுகளை அமைக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (அ-19)

# பொதுக்கட்டமைப்பை எதிர்த்தால் தனிநாடு உருவாக வழியேற்படும்

## லிபரல் கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி முகாமைத்துவ அமைப்புப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தும் திட்டமொன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பித்திருக்கிறது.

உத்தேச அமைப்புப் பற்றிய விபரங்கள் அடங்கிய கையேடு ஒன்று நேற்று முன்தினம் மூன்று இடங்களில் விநியோகிக்கப்பட்டது.

கோட்டை புகையிர நிலையம், மருதானை புகையிரத நிலையம், நுகேகொட சுப்பமாக்கற் ஆகியவற்றில் இந்தக் கையேடுகள் அமைச்சர்களினாலும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களினாலும் விநியோகிக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகப் பணிப்பாளர் கலாநிதி சிசில் பண்டார சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுனாமி முகாமைத்துவ அமைப்புப் பற்றி மக்கள் தெரிந்து கொண்ட பின்னர் உத்தேச சட்டமூலத்தை உடனடியாக புத்திஜீவிகளிடம் விவாதிப்பதற்கு சமர்ப்பிக்குமாறு லிபரல் கட்சி ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

உத்தேச அமைப்பு நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக இல்லை என்று லிபரல் கட்சித் தலைவர் பேராசிரியர் ரஜித விஜயசிங்க தெரிவித்தார்.

இதனை எதிர்ப்பது தனிநாடு ஒன்றை அமைக்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் வரப்பிரசாதமாக அமையும் என்று அவர் கூறியுள்ளார். (அ-9)

# பொதுக்கட்டமைப்புப் பிரேரணை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பாராளுமன்றத்தின் அங்கீகாரமில்லாமல் கைச்சாத்திட அரசாங்கம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

எனினும், ஜே.வி.பியிலிருந்தும் அரசாங்கத்தின் ஒரு தரப்பிலிருந்தும் பொதுக்கட்டமைப்பு விடயத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது.

இதனையடுத்தே அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரியவருகிறது. (ற-4)

# இந்தோனேஷிய சரக்குக் கப்பல் இலங்கைக்கு அருகில் மூழ்கியது

இந்தோனேஷியாவில் இருந்து தேங்காய்ப்புண்ணாக்கு ஏற்றிய கப்பல் ஒன்று கடந்த ஏப்ரல் மாதம 28 ஆம் திகதி கொச்சிக்குப் புறப்பட்டது. இந்தக் கப்பலில் 1757 தொன் தேங்காய்ப்புண்ணாக்கு ஏற்றப்பட்டிருந்தது.

இந்தக் கப்பல் கடந்த மே மாதம் 20 ஆம் திகதி கொச்சியை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்தக் கப்பல் குறிப்பிட்ட திகதியில் அந்தமான் நிக்கோபார் தீவுப் பகுதியில் வந்துகொணடிருப்பதாகத் தகவல் கிடைத்தது. அதன் பின்னர் அந்தக் கப்பல் எந்தப் பகுதியில் வந்துகொண்டிருக்கிறது என்று தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இதற்கிடையே நேற்று முன்தினம் அந்தச் சரக்குக் கப்பல் இலங்கைக்கருகே நடுக்கடலில் மூழ்கிவிட்டது எனத் தெரிய வந்துள்ளது. இந்தக் கப்பலின் கப்டன் லெட்சாங்கோ உட்பட 2 கப்டன்கள் கப்பலில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. மற்ற ஊழியர்கள் அனைவரும் தப்பிவிட்டதாகவும் கொச்சி துறைமுகத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது. இருந்தபோதிலும் கப்பலில் வந்த பலர் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தற்போது கடலில் மூழ்கிய சரக்குக் கப்பல் கடந்த 32 ஆண்டுகளாக வெற்றிகரமாக கடல் பயணத்தை மேற்கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

சரக்குக் கப்பல் மூழ்கிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அந்தக் கப்பலை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)

# விளையாட்டுப் போட்டி

(பொன்னாலை)

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகம் நடத்தும் திருவள்ளுவர் நினைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 19ஆம் திகதி கருணையம்பதி சனசமூக முன்றலில் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் காலை ஆண்களுக்கான மரதனோட்டம், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் ஆகியன இடம்பெறும்.

மாலை நிகழ்வுகளாக கயிறிழுதல், வழுக்கு மரம்ஏறுதல், மெதுவான சைககிள் ஓட்டம், தலையணைச் சமர் ஆகியவற்றுடன் பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும இடம்பெறவுள்ளன. (ற-49)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ.திருநாவுக்கரசு 24

அரசின் ஆயுதப்படையினால் பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் இறப்பைத் தழுவிக் கொண்டனர். அதாவது மோதல் இடம்பெறும் பகுதியைச் சுற்றியுள்ளவர்கள் பெரிதும் பாதிப் படைந்துள்ளனர். 1981-1987 ஒக்டோபர் வரையிலான பல்வேறு வகைப்பட்ட வன்செயல் களினால் 16,994 பேர் இறந்துள்ளனர். 1 278பேரைக் காணவில்லை. 5,272பேர் காயமடைந் துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தற்போது இந்த எண்ணிக்கை யானது ஒவ்வொருதரப்பிலும் பலமடங்கு அதிகரித்தே காணப்படும் என்பது உண்மையான கூற்றாகும். 1983ஐத் தொடர்ந்து இன்றுவரையில் காணப்படும் இனவிரோத நடவடிக்கை களுக்கும் இனப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்ந்தும் தோல்வி கண்டே வருகின்றன. இதன் காரணங்களை பின்னால் கூறப்படும் சிலரது கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி நோக்கினால் எம்மால் உண்மையைத் தெளிவாக இனங்காண இயலு மெனலாம்.

**Outburst of Roci al riots in 1956, 1958, 1961, 1974, 1977, 1979, 1981 and 1989 caused further inter-communal hatred, and this led to large numbers of men, women and children being mercilessly massacred, their property destoryed, and thousands made refugees. The peaceful negotiated resolution of the Tamil politicians to solve the oppression of the Tamils failed, and this led the Tamil youth to resort to an armed struggle. During the course of five years from 1983 to 1987 the key Tamil militant groups formed several splinter groups following both, ideological differences and personality conflicts. Smouldering resentment surfaced as open military confrontation after July 1983. Underground pockets of anti-Government separatists came out in to the open, established themselves asorganised groups and proclaimed themselves the liberators of the Tamil people. The political wing of the key groups had sensational campaigns from marches to public meetings, entire young people to join the fighting froce. The battle for a separate state had only begun**

**- Rohan Cunaratna.**

''இந்த அரசினால் இப்பிரச்சினையைத் தீர்ப்பது என்பது இலகுவில் நடக்கக் கூடியதல்ல. மேலைநாடுகளோ, சிங்களவர்களோ, தமிழர்களோ இந்த அரசை நம்பவில்லை. 1983ல் இடம்பெற்ற மிருகத்தனமான செயல்களால் இது உலகப்பிரச்சினையாக மாறிவிட்டது. பெரும்பாலான தமிழர்கள் இந்தியாவுக்குப் போனார்கள். அதன்பின்னர் இது இந்தியாவுக்கும் ஒரு பிரச்சினையாக மாறிவிட்டது''

-எதிரிவீர சரத்சந்திர.

''சிங்களம் மட்டும் சட்டம், பல்கலைக்கழகப் பிரவேசத்தில் விகிதாசாரம், அரசபதவிகளில் தமிழர்களுக்குக் குறைந்தஇட ஒதுக்கீடு, இவ்வாறாக நம்மால் ஆரம்பிக்கப்பட்ட முட்டாள்தனமான செயல்களின் விளைவே இன்றைய பிரச்சினை

-நிவ்டன் குணசிங்க.

''அரசியல் யாப்பின் 6வது திருத்தம் தமிழ்மக்களின் வாக்குரிமையைப் பறித்துவிட்டது. 1983ன் பின் வடக்கிலும் கிழக்கிலும் பாராளுமன்றத்துக்காக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர் எவரும் இல்லை''

''போராளிகளின் ஆயுதப்போராட்டம் தொடங்குவதற்கு அடுத்தகாரணம் 1977ல், 1981ல், 1983ல் அவைக்குப் பின் அலையாக மீண்டும் மீண்டும் ஏற்பட்ட கொடூரமான காடைத்தனங்கள், கார்ணமின்றிக் கைது செய்தல், தடுத்துவைத்துச் சித்திரவதை செய்தல், அப்பாவி மக்களைக் கொலைசெய்வது இவற்றை விசாரித்துத் தண்டனை வழங்காமை என்பன. இதன் விளைவாக எந்த அரசு அதிகாரத்திலிருந்தாலும் தண்டனை கிடைக்குமே என்ற அச்சமற்றவராக தமிழருக்கு எதிராக எந்தவிதமான காடைத்தனத்தையும் கட்டவிழ்த்து விடலாம் என்ற நிலை ஏற்பட்டது. இவ்வாறான அநீதிகளுக்கு எதிராக அரசியல் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வில்லை. ''இவர்களும் இந்த நாட்டுப் பிரஜைகள் தான்; அவர்களுக்கு எதிராக இவ்வாறான அநியாயங்களைச் செய்யக்கூடாது'' என்று இடித்துரைப்பதற்கு எவரேனும் சிங்கள இனத்தவர்களில் இருந்தார்கள் என்றால் அது மத்தியதரவர்க்கத்தினருள் மிகச்சிலர் மட்டுமே. இவ்விரு பிரதான காரணிகளே தமிழ்ப் போராளிகளை ஆயுதமேந்த ஊக்குவித்தன''

-நீலன் திருச்செல்வம்.

மேலே கூறிப்போந்த கருத்துக்களின் உண்மைத்தன்மை எவ்வாறிருப்பினும் இந்த நாட்டின் இனக்கலவரங்களினதும், இனக்குரோதங்களினதும் அடிப்படையை விளக்குவதில் அவை முன்னிற்கின்றனவென்பது மிகையாகாது. இனக்கலவரம் என்பது இனக்குழுக்களி டையேயான மோதல்களைக் குறிக்குமாயினும், இன ஒடுக்குமுறையோ, அதிகாரம்படைத் தோரது திட்டமிட்ட முறையிலான இன்னோரினத்தின் மீதான அடக்குமுறையை, ஆக்கிரமிப்பை, தாக்குதல்களைக் குறித்து நிற்கு மெனலாம். 1983 இற்குப் பிந்திய இலங்கையின் துயர்நிகழ்வுகள் நமக்கு முதலாவதிலும் வேறுபட்ட நிலைப்பாட்டினைத்தானே காட்டி நிற்கின்றன.


### தமிழ்த் தேசியவாதமும், தீவிரவாதமும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான காரணிகளுள் தலையானதாக விளங்கும் சிங்கள- பௌத்த பேரினவாதத்தின் மேலாதிக்க உணர்வினையும், அது பல்துறை வடிவங்கள் பூண்டு செயற்பட்ட வரலாற்றையும், தொடர்ந்தும் அதனது அச்சுறுத்தல்களும் ஆக்கிரமிப்புகளும் இந்தத் தேசத்தின் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்குமாற்றையும் இதுவரையிலான எமது ஆய்விலே கண்டோம். (தொடரும்)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

### பத்தாம் திருவிழா (மஞ்சம்)



### எங்கள் குல தெய்வம்

அலைகடல் மத்தியில் வீற்றிருக்கும் கடல் அம்மா
சரணடைந்தோம் உன்பாதமதில் கடல் அம்மா
எம் துன்பமெல்லாம் நீக்கி
அருள்புரிவாயே தாயே
சந்ததமும் எண்ணிபோற்றுகின்றோம்
தாயே எங்கள் குலதெய்வமே

மானிப்பாய் ரூபன்

### மக்கள் நலம்காக்கும் நாயகி

மக்கள் நலம்காக்கும் நாயகியே
நாம் உம்மை காண ஓடிவந்தோம்
தேடி வந்தோர் வினைதீர்க்கும் தாயே
ஓடி வந்து எம்வினை தீர்ப்பாய் தேவி

நயினை ராகினி தேவராஜா

### நாடுவார் உள்ளம் நயந்துறையும் அம்மையே

எட்டாத புகழுடைய வடியார் கூட்டம்
ஏங்கியுன் பாதமதைத் தொழுது நின்று
முட்டாக வரு மிடர்கள் முடிப்பா யென்றும்
மோதவரு வினையதனைத் தீர்ப்பா யென்றும்
கட்டாக வருபிறவி தவிர்ப்பா யென்றும்
கட்டுரைக்க வலர்குறைகள் நீக்கி நிற்கும்
மட்டாரு மலர்சூழ் நயினையி லுற்ற
நாகபூசணி அம்மையே ஆதரித் தாளே!

கற்கோவளம், மு.தணிகாசலம்

### அல்லல்லகற்றி நல் ஒளி தந்திடம்மா

நல்ல பாம்பு குடைபிடிக்க
உன்-ஜோதி உலகெங்கும் ஒளிபரப்பிட
நாம்-அன்று வாழ்ந்தோம் நிம்மதியாய்
நோய்-நொடி என்று நாம் துடிக்க
உன்-ஒளி பட்டு நாம் எழுவோம்?
உன்-வரத்தால் மண்ணில் தவழ்ந்தோம்
போர் துரத்த ஓடினோம் இத்தனை காலம்
நாம் மறுபடி உன்மடி தேடி வருகிறோம்
தாயே அருள் புரிவாய் நிரந்தர சமாதானத்துக்கு
நிம்மதியாய் நாம் வாழ

புத்தூர், ரகு

### மன்றேறி மாசுபெற்றாய்

விடமுண்ட கண்டத் திறையொரு பாகம்
இடம்கொண்ட தாயே அமரர்-இடர்தீரக்
குன்றுடை யானுக்குக் கூர்வேல் கொடுத்தவளே
மன்றேறிப் பெற்றாய் மாசு

சண்

# பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் நினைவுப் பேருரை

## இடைநிலை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒப்பீட்டு ஆய்வு நோர்வே - எத்தியோப்பியா - இலங்கை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) நினைவாக 30.05.2005ஆம் திகதி "இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச சேவை - ஒப்பீட்டு ஆய்வு, நோர்வே - எத்தியோபபியா - இலங்கை" எனற தலைப்பில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மற்றும் உப பீடாதிபதி பாலசுப்பிரமணியம் தனபாலன் ஆகியோர் நிகழ்த்திய நினைவுப் பேருரையின் தொகுப்பு.


**கலாநிதி, திருநாவுக்கரசு கமலநாதன்**
(பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
(உப பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)


(தொடர்ச்சி.....) 2

### நோர்வே (Norway)

#### அமைவிடம்

ஸ்கண்டிநேவிய குடாநாட்டின் மேற்கு மற்றும் வடபகுதியை உள்ளடக்கியதாகவும் ஆட்டிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள 'ஸ்வல் பாட்' (Svalbard) என்ற தீவுக் கூட்டங்களைக் கொண்டதாகவும் நோர்வே உள்ளது. நோர்வேக்கு கிழக்காக சுவீடன், பினலாந்து மற்றும் ரஷ்யா உள்ளன. மேற்கில வடகடலும் அத்திலாந்திக் சமுத்திரமும் உள்ளன. வடக்கில் பரெண்ட்ஸ் கடல (Barents Sea) உள்ளது.

ஸ்வல்பாட் தீவுக் கூட்டங்களை உள்ளடக்கிய நோர்வே நாடடின் பரப்பளவு 386,958 சதுர கிலோமீற்றர் கொண்டதாகவும் எத்தியோப்பியாவின் சுமார் மூன்றிலொரு பகுதியாகவும் உள்ளது. பிரதான தரைப்பகுதி, தெற்கிலிருந்து வடமுனை வரை 1752 கிலோமீற்றர் நீளமானதாக உள்ளது.

நோர்வேயின் கரையோரப் பகுதியானது உலகிலேயே மிக நீளமானதும் மிகவும் கரடுமுரடானதும் கிட்டத்தட்ட 50,000 தீவுகளைக் கொண்டிருப்பதும் ஆகும். (Visitnorwery o) இங்கு 01.01.2000 ஆண்டைய கணக்கினபடி 4,525,000 சனத்தொகை காணப்பட்டது.

#### கலாசாரம்

நோர்வே பொதுவாக ஓர் ஓரின நாடாகக கருதப்படுவதுடன் பரவலான சனத்தொகையைக் கொண்டதாகவும் உள்ளது. இந்நாட்டு மக்கள் ஒரே மொழியை - நோர்வேஜிய மொழி - பேசுபவர்களாவும், ஒரே கலாசாரததைக் கொண்டவர்களாகவும் உள்ளனர். அமெரிக்கா அல்லது எத்தியோப்பியா அல்லது இலங்கை போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது அது இன்னும் ஓரின நாடாகவே உள்ளது. இருந்தபோதும் - அநேகமாக ஏனைய நாடுகள் ஒவ்வொன்றைப் போலவும் நோர்வே இனரீதியாகவும், கல்சார ரீதியாகவும் மக்களின் கலபபினை எப்பொழுதும் கொண்டிருந்தது. சமி (Sami) மற்றும் பினிஷ் (Finnish) மொழி பேசும் மக்கள் அங்கு சிறுபான்மையினராகவும், அவர்களின் பாரம்பரியம் நீண்டதொரு வரலாற்றைக் கொண்டதாகவும் உள்ளது. இருந்த போதும் நோர்வேயில் சிறுபான்மை இனத்தவர்கள் என்ற பிரச்சினை கடந்த 15 வருடங்களாக மட்டும் இருந்து வருகின்றது. இதற்கான பல காரணிகள் இருநத போதும் ஐரோப்பியர் அல்லாத நாடுகளிலிருந்து குடிவரவே இதற்கான முக்கிய காரணியாக உள்ளது.

பாகிஸ்தானியர், துருக்கியர் பெருமளவில் குடியேறினர். தொடர்ந்து அகதிகளாக சிலி, ஈரான், எரித்திரியா, சோமாலியா, இலஙகை, வியட்நாம், துருக்கி, குர்கிஸ்ரான் மற்றும் முன்னைய யுகோசிலாவியா போன்ற நாடுகளிலிருந்து அங்கு வந்தனர். இவர்களில் அனேகர் பெரிய நகரங்களில் குறிப்பாகத் தலைநகரில் குடியேறினர். எனவே இவர்கள ஒரே அயலில் வசித்தனர். சில நகரங்களின் பகுதிகள் திடீரென உண்மையான பல்லினச் சமூகமாக மாறிவிட்டன -இது வழமைக்கு மாறானதாகவும் நோர்வே இனத்தவர்களுக்கு அச்சம் ஊட்டுவதாகவும் இருநதது. இவ்வாறு குடியேறியவர்களில் 70,000 பேர் முஸ்லிம் ஆவர். மொழி மற்றும் கலாசார வேறுபாடுகள் ஆகிய இரண்டும் ஒன்றிணைவதற்கு ஒரு பாரிய தடையாக இருக்கின்றது. எனவே பாகுபாடு பரநதளவில் உள்ளதென்பதில் சந்தேகமில்லை. இனவாத சம்பவங்களையும் எம்மால் அவதானிக்க முடிகிறது. நோர்வேயில் இன்று வழிகாட்டல் ஆலோசனைகள் பலர் கையாள வேண்டிய பிரச்சினையாக இது உள்ளது. இப்பிரச்சினை அரசியலிலும், மக்களின் விவாதங்களிலும் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

#### நோர்வேயின் கல்வி முறை

சிறுவர்களுக்கான சர்வதேச பாடசாலைக் கல்விமுறை நோர்வேயில் 250 வருடங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டது. 1889ஆம் ஆண்டிலிருந்து ஏழு வருட கட்டாயக் கல்வி முறை ஏற்படுத்தப்பட்டு 1969 இல் அது 9 வருடங்களாகவும், 1997 இல் 10 வருடங்களாகவும் அதிகரிக்கப்பட்டது. மேல் இடைநிலைப் பாடசாலைக் கல்வி (Upper Secondary School) சுயவிருப்பின் அடிப்படையில் அமைந்தபோதும் நடைமுறையில் பெரும்பாலும் சகல மாணவர்களும் சமுகமளிக்கின்றனர்.

கட்டாயமாக பாடசாலைக்குச் செல்ல வேண்டிய காலப்பகுதி நோர்வேயில் 10 வருடங்களாகும். சிறுவர்கள் 6 வயதில் தமது கல்வியை ஆரம்பிக்கின்றனர். ஆரம்ப மற்றும் கீழ் இடைநிலைக் கல்வியானது தனியானதொரு தேசிய பாடவிதானத்தின் அடிப்படையில் சமத்துவமான ஒருங்கிணைக்கப்பட்ட பாடசாலை முறைக் கோட்பாட்டுக்கு அமைய நோர்வேயில் ஸ்தாபிக்கபபட்டன.

இது கிட்டத்தட்ட ஒவ்வொரு பத்து வருடங்களுக்கு ஒரு தடவை மீளாய்வு செய்யபபடுவதுடன் தற்போதுள்ள கல்விமுறைககு "யாவருக்கும் கல்வி" என்பது அடிப்படைக் கருத்தாக உள்ளது. சகல சிறுவர்களுக்கும அவர்களின் சமூக, கலாசாரப் பின்னணியைக் கருத்திற்கொள்ளாது கல்வி புகட்டபபடுகின்றது.

மேல் இடைநிலைக் கல்வி உட்பட அரசினால் வழங்கப்படுகின்ற கல்வி வசதிகள் யாவும் இலவசமானவையாகும. நாம் இங்கு கட்டாயக் கல்வி எனக் குறிப்பிடுவது யாதெனில் - நோர்வேயிலுள்ள ஒவவொரு பிள்ளையும் 10 ஆம் தரம் வரை பாடசாலைக்கு சமுகமளிக்கின்றது என்பதாகும்.

#### கல்வியின் பிரதான கட்டங்கள்

1.கீழ் ஆரம்பக் கல்வி (தரங்கள் 1- 4 வரை)
2.மேல் ஆரம்பக் கல்வி (தரங்கள் 5-7 வரை)
3.கீழ் இடைநிலைக் கல்வி (தரங்கள் 8-10 வரை)
4.மேல் இடைநிலைக் கல்வி (தரங்கள் 11-13 வரை)
5. உயர் கல்வி

மாநகர சபைக்குள் (Kommune) ஆரம்ப மற்றும் கீழ் இடைநிலைப் பாடசாலைகளுக்குப் பொறுப்பாக உள்ளன.

இதேவேளை, மாவட்டங்கள் (Counties) மேல் இடைநிலைக் கல்விக்குப் பொறுபபாக உள்ளன. அத்துடன் அரசு உயர் கல்விககுப பொறுப்பாக உள்ளது. சகல மட்டங்களிலும் சில தனியார் பாடசாலைகள் உண்டு. ஆரம்ப மற்றும் கீழ் இடைநிலை மட்டங்களில் கிட்டத்தட்ட 2% சதவீதத்தினதாக தனியார் பாடசாலைகள் உள்ளன.

(தொடரும்)

---

## ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்புக்கு முன்னாள் கொழும்பு மேயர் ஆதரவு

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக் கடடமைப்பை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆதரிக்கவேண்டும் என்று முன்னாள் கொழும்பு மாநகரசபை மேயர் கே.கணேசலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

லேக்ஹவுஸ் நாளேடான தினமினவுக்கு அளித்த நேர்காணலில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வடக்கு -கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இப் பொதுக கடடமைப்பு உருவாக்கப்படுவது அவசியமானது என்றும் இதை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளும் ஆதரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

---

## மோ.சைக்கிள் விபத்து நால்வர் படுகாயம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு இரு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்துச் சம்பவத்தில் சாள்ஸ் அன்ரனிஸ் (வயது-18) படுகாயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் தோமஸ் - அன்ரனி பீரிஸ் (வயது -24), டேவிட் மரியசீலன் செல்வக்குமார் (வயது -23), தோமஸ் குணசீலன் தயாளசிறிஸ் (வயது-4) ஆகிய மூவரும் மந்திகை வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ரு-35)

---

## மருதங்கேணி பிரதேசத்தில் நிரந்தர வீடுகள் அமைக்க அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இடங்களில் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களது பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு முன்வந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்தல் தொடர்பாகவும், வேலைத்திட்டங்களை முடிக்கும் காலப்பகுதி தொடர்பாகவும், வீடுகளை அமைப்பதற்குத் தேவையான காணிகள தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது. (அ-19)

---

## தவறான செய்திக்கு மகாநாயக்கர்கள் கண்டனம்

(கொழும்பு)

'லக்பிம' என்ற சிங்களப் பத்திரிகையில் ஜனாதிபதி பற்றி வெளியான ஒரு செய்தியை மூன்று பீடங்களின் மகாநாயக்கர்களும் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்.

அந்தச் செய்தியில் ஜனாதிபதியை, பௌததர் அல்லர் என்று கருத மகாநாயக்கர்கள் முடிவுசெய்திருப்பதாகக் கூறப்பட்டிருந்தது.

இதுதொடர்பாக மகாநாயக்கர்கள் விடுதத அறிக்கையில், அந்தச் செய்தி முற்றிலும் மக்களைத் தவறான வழியில் இட்டுச்செல்லக் கூடியதாகவும், நாட்டில் அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கக்கூடியதாக இருக்கின்றது என்றும் கண்டித்துள்ளனர்.

இந்தச் செய்தி குறித்து தாம் அறிந்ததும் அதிர்ச்சியும் துயரமும் அடைந்ததாக மகாநாயககதேரர்கள் தெரிவித்தனர்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் மகாநாயக்கர்கள கலந்தாலோசிப்பர் என்று ஜனாதிபதி மீண்டும் மீண்டும் உறுதியளித்திருக்கையில், இந்தச் செய்திகளை வெளியிடுவது தவறானது என்று அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து-5)

---

## பயிற்சிப் பாசறை

(பொன்னாலை)

சென்-சாள்ஸ் மகாவித்தியாலய மாணவர்களுக்கான ஒருநாள் ஆங்கிலப் பயிற்சிப் பாசறை நாளை காலை 8.30 மணிக்கு சென் - சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் அதிபர் ம.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ரு-49)

# குளிர்ச்சி தரும் மங்குஸ்தான் பழம்



கோடை வெயிலின் கொடுமையில் மனித இனம் இளைப்பாற இறைவன் பலவிதமான பழ வகைகளைக் கோடையிலே தந்துள்ளான். மா, பலா உள்ளிட்டவறறுடன் குளுமை தரும் மங்குஸ்தான் பழங்களின் வரத்தும் இந்தக் கோடையில்தான் அதிகரிக்கும்.

மங்குஸ்தான் பழம் பார்ப்பதற்கு பனை நொங்கு போல் தோற்றத்தில் உள்ளது. இதன் வெளிப்புறத் தோலை நீக்கினால் உள்ளே பருத்தியைப் போன்று வெண்மையான ஆரஞ்சு சுளைகள் உள்ளன.

மங்குஸ்தான் குளிர்ச்சியைத் தந்து உடல் சூட்டைத் தணிக்கிறது. பெண்களுக்கு ஏற்படும வெள்ளைபடுதல், மாதவிடாய் அதிகம் போவதைக் கட்டுப்படுத்துதல், குடல் இரைப்பை புண், அல்சர் நோய்களுக்கு மருநதாக உள்ளது. இதன தோல் பகுதியைக் காயவைத்துத் தூள் ஆக்கி இரத்தக் கசிவுடன் மலம் வெளியேறும் போது உண்டுவந்தால் நோய்தீரும். இத்துடன் இநதப் பழம் பசி இல்லாதவர்களுக்குப் பசியையும் உண்டாகும். இது ஏப்ரல் முதல் ஜுலை வரை விளையும்.

# இதிலும் அவர்கள் தான் No :1



உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பழக்கம். சிலசமயம் ஒரு நாட்டையே பிடித்து சில விநோதமான பழக்கங்கள் ஆட்டி வைப்பதுண்டு.

பெரும்பாலான விசித்திரப் பழக்கங்களின் தாயகமாக விளங்குவது அமெரிக்கா தான். அந்தவகையில் **Video Game** எனப்படும் விளையாட்டுப்பழக்கம் அமெரிக்காவில் ஒரு சமூக நோயாக மாறிவிட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் மட்டும் 10 லட்சம் பேர், 10 கோடி மணிநேரததை வீடியோ கேம் விளையாடி வீணாக்கியதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. இந்த விளையாட்டுகது அடிமையாகியவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகரித்து வருவதன காரணமாக கருத்து வேறுபாடு ஏற்ட்டு விவாகரத்துக்கள் பெறுபவர்களின் எண்ணிக்கையும் உயர்ந் துள்ளது.

சிறுவர்கள் வாரத்துக்கு 70 மணிநேரம் வரை விளையாடுவதாகவும், விடியற்காலை 5மணிவரை விளையாடுவதைத் தடுத்தால் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் பெற் றோர்களைச் சிறுவர்கள் மிரட்டுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

பாவம் இந்த அமெரிக்காவுக்குத்தான் எப்படியெல்லாம் பிரச்சினைகள் வருகின்றன!

# பிளேன் ரீ வாய்ப்புற்றுநோயைத் தடுக்கும்...!

பிளேன் ரீ குடித்தால் வாய்ப்புற்றுநோய் வருவதைத் தடுக்க முடியும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். பிளேன் ரீயில் காணப்படும் பாலிபெனால் பொருட்கள், வாய்ப்பகுதியில் காணப்படும செல்களில தோன்றும் புற்றுநோய்க்குக் காரணமான டி.என்.ஏ மாற்றங்களை அப்படியே திருப்பிப்போட்டு விடுகிறது. இதனால வாய்ப்பகுதி செல்களில் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். கொல்கத்தாவில் உள்ள விவேகானந்தா மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு நடத்திய ஆய்வில் இந்த தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளது.

புற்றுநோய் வகைகளில் வாய்ப்புற்றுநோய் மிகவும் ஆபத்தானது. கடந்த 2002ஆம் ஆண்டு கிடைத்த புள்ளிவிவரங்களின்படி, இந்நோயினால் 1,45,500 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் ஒரு குறிப்பிடத்தக்க வ'ஷயம் என்னவென்றால், உயிரிழந்தவர்களில் 3-2 பங்கினர் வளரும் நாடுகளைச் சேர்நதவர்கள் ஆவர். வயது வந்த ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் இந்நோய் சர்வசாதாரணமாக காணப்படுகிறது.

அமெரிககாவில் முன்பு நடந்த ஆராய்ச்சியில் தேயிலையில் காணப்படும் பாலிபெனாலகள், வாய்ப் பகுதியில் உள்ள செல்களில், புற்றுநோய்க்கு முந்தைய சூழ்நிலைகள் உருவாகுவதைத் தடுப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# மருத்துவக் குறிப்புகள்

## திடீர் இருதய நோய் ஏற்பட்டால்...

திடீரென இருதயவலி ஏற்பட்டால் ஒரு முட்டையின் வெண்கருவை எடுத்து ஒரு அவுன்ஸ் பசும்பாலில் சேர்த்துச் சாப்பிட்டால் வலி உடனே நீஙகும். வேறொரு மருந்தும் சாப்பிடலாம். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகியவற்றைச் சம எடை சேகரித்துக் கொள்ளவேண்டும். இவற்றை நன்கு பொடியாக்கி அந்தத் தூளை ஒரு தேக்கரண்டி அளவுக்கு எடுத்து வெந்நீரில் கலந்து சாப்பிடலாம். இருதய வலி சுகமாகும். பொதுவாக தினமும் இரவில் பசும்பாலில் ஒரு அவுன்ஸ் தேன சேர்த்துச் சாப்பிட்டு வருவதும் தினசரி உணவில் பூண்டு, வெங்காயம் இவற்றை நிறையச் சேர்ப்பதும் இருதயத்திற்க வலுவூட்டும். இருதயம் சம்பந்தமான வியாதிகள் வராது.

## ஹிஸ்டீரியா நோய் சுகமாக

முருங்கை மரத்தின் வேருக்கு அற்புத மருத்துவ குணம் உண்டு. இதை நீர் சேர்க்காமல் அம்மியில் அரைத்து இந்த விழுதைப் பசும்பாலில் இட்டு காய்ச்சி காலையிலும் மாலையிலும் நான்கு நாட்கள் சாப்பிட ஹிஸ்டீரியா நோய் அகலும்.


## தீ சுட்ட ரணம் உடனே ஆற

பழுத்த அத்தி இலை, ஆலமர, புங்க மர பட்டை இவை மூன்றையும் நன்கு நறுக்கி விழுதாக்கி புங்கன் எண்ணெய்யை விட்டு காய்ச்சி வடிகட்டிய தைலத்தை தீ சுட்ட புண்களின் மீது தடவி வந்தால் புண் வெகு விரைவில் ஆறும்.

## வாயு அகல

வெள்ளைப் பூண்டின் மேல் தோலை உரித்து அகற்றிவிட்டு பூண்டை இலேசாக நசுக்கி பசும்பாலில் இட்டு காய்ச்சி ஆறியவுடன் சாப்பிட்டால் வாயு வாயுக் குத்தல் உடனே அகலும்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-64




*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப போட்டி இல ~ 64**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..........................................................
முகவரி :- ..........................................................
..........................................................
..........................................................

இங்கே வெட்டுக --------------------------------------------- ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 23ஆம் த'கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)இலங்கையின் ஒரு மாவட்டம். (6)எல்லை - முடிவு என்ற பொருளிலும் ஏவல் பொருள். (7)ஒன்றுக்கு மேற்பட்டவற்றை ஒன்றாகச் சேர்த்தால் வருவது. (8)மேலான பொருள். (10)இங்கு தான் சிவபெருமான் வீற்றிருக்கிறார் என்று புராணங்கள் கூறுகிறது. (12)முகத்தில் உள்ள பிரதான உறுப்பு. (13)பேசும் பறவை ஒன்று. (14)திடப்பொருளாக இருப்பது. (15)யானை - இப்படியு மழைப்பர். (16)திருவிழா - பெருநாள் என்று பொருள்படும. (17)மீன்பிடிக்கும் கருவியொன்று.

## மேலிருந்து கீழ்

(1)கல்லாயிருந்து இராமன் கால்பட்டு விமோசனம் அடைந்தவள். (2)நீரில் தோன்றுவது குமிழ் என்றும் கூறலாம். (3)ஒருவகை உலோகம். (4)இடம் - ஒத்தகருத்துச் சொல். (5)தானியங்களை அரைத்தெடுத்த குறுணல். (8)கீரைவகைகளில் ஒன்று. (9)சிவிகை என்றும் சொல்லலாம். (11)போதைப்பொருள் என்று பொருளபடும். (12)படுத்துக் கொள்வதற்குரிய தளபாடம். (14)இலங்கையின் மத்தியிலுள்ள ஒரு நகரம். (15)பாடல் பாடுபவனையும் இப்படி அழைப்பர்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.62 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.கட்டபொம்மன் 5.பூகம்பம் 6.வடவேங்கடம் 8.கைவிலங்கு

**மேலிருந்து கீழ்**

1.கற்பூரவள்ளி 2.கடம் 3.கம்பளம் 4.புதன் 6.வேங்கை 7.கும்மி.

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு** | :- | **S.மதுஷா சங்கத்தானை, சாவகச்சேரி.** |
| **இரண்டாம் பரிசு** | :- | **பி.பிருந்தாபன் மிருசுவில் வடக்கு, மிருசுவில்.** |
| **மூன்றாம் பரிசு** | :- | **வி.செல்வநாயகம் 'சாருஜா' சிவன்கோவில் வீதி, புத்தூர்.** |

**போடடியில கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் வீபரம்**

க.குருநாதன், கோண்டாவில். கே.அரசேஸ்வரன், நல்லூர். உ.குருசங்கர், கொக்குவில். இ.நீலவேணி, சங்கானை. து.நக்கரன், மல்லாகம். வே.குமாரசுவாமி, கரவெட்டி. ப.சிவசூரியர், சங்கானை. அ.தனுஷா, கைதடி. ம.ஜனா, இணுவில். வே.சாருகேஷ், நல்லூர். இ.வினோ, இணுவில். P.S.ராணி, சங்கானை.

# எவ் -16 ரக விமானங்களை பாக்.ற்கு விற்கக் கூடாது

## ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அமெ. எம்.பிக்கள் எதிர்ப்பு

(நியூயோர்க்)

பாகிஸ்தானுக்கு எவ்-16 ரக விமானங்களை விற்கக் கூடாது என்றும், அப்படி விற்றால் நம்மை நாமே முட்டாளாக்கிக் கொள்வதாக அமையும் என்றும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அமெரிக்க எம்.பிக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கப் பாராளுமன்றத்தில் சர்வதேச உறவுகள் தொடர்பான சல் கமிட்டியில் இடம்பெற்றுள்ள அமெரிக்க எம்.பிக்கள் பலர் இந்தியாவுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எவ்-16 ரக போர் விமானங்களை விற்கக்கூடாது என்றும் அதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அந்த எம்பிக்கள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ புஷ்ஷை வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கனவே அமெரிக்காவிடம் இருந்து வாங்கிய போர் விமானங்களை இந்தியாவுக்கு எதிரான போரில் பாகிஸ்தான் பயன்படுத்தி உள்ளது. இப்போது எவ்-16 போர் விமானங்களைக் கொடுத்தால் அதையும் இந்தியாவுக்கு எதிராகத்தான் பாகிஸ்தான் பயன்படுத்தும். அதுமட்டும் அல்லாமல் எவ்-16 ரக போர் விமானம் அணு ஆயுதத்தைத் தாங்கிச் செல்லும் போர் விமானம் என்பதால் அதைப் பாகிஸ்தானுக்கு விற்பதை ஜோர்ஜ் புஷ் நிர்வாகம் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அந்த எம்.பிக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு. ஆனால் பாகிஸ்தான் ஜனநாயக அரசைக் கடைப்பிடிக்கவில்லை. அணு ஆயுத பரவல் தடையை அமெரிக்கா குறைத்து வருகிறது. ஆனால் அணு ஆயுத பரவலை ஊக்குவிக்கும் வகையில் பாகிஸ்தான் அணு விஞ்ஞானி ஏ.க்யூ.கான் அணு ஆயுத தொழில்நுட்பத்தை வடகொரியா, லிபியா, ஈரான் ஆகிய நாடுகளுக்கு விற்றுள்ளார்.

இதுதொடர்பாக விசாரணை நடத்த அமெரிக்க உளவு விசாரணைக் குழுவை பாகிஸ்தான் அனுமதிக்கவில்லை. எனவே பாகிஸ்தானுக்கு எவ்-16 ரக விமானங்களை விற்கக் கூடாது. அப்படி விற்றால் நம்மை நாமே முட்டாளாக்கிக் கொள்வதற்குச் சமமாகும் என்றும் அந்த எம்.பிக்கள் கூறியுள்ளனர்.

சர்வதேச தீவிரவாதத்திற்கு எதிரான போரில் அல்-கெய்டா இயக்கத்திற்கு எதிராக மட்டும்தான் பாகிஸ்தான் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்கிறது.

ஆனால, பிற தீவிரவாத இயக்கங்களின் மேல் நடவடிக்கை எடுக்காமல் பாகிஸ்தான் தயக்கம் காட்டி வருகிறது. எனவே அந்நாட்டுக்கு அமெரிக்கா போர் விமானங்களை விற்கக்கூடாது என்றும், அந்த எம்.பிக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காஷ்மீரில் வன்முறையைத் தூண்டுவதற்காகவே பாகிஸ்தான் தனது நாட்டில் சில தீவிரவாத இயக்கங்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருகிறது என்றும், அந்நாட்டுக்கு எவ-16 ரக விமானங்களை விற்க புஷ் நிர்வாகம் முடிவு செய்திருப்பது தங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அந்த எம்.பிக்கள் கூறியுள்ளனர். (ற)



உலகின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான நயாகராவின் மேல் கம்பி மீது நடந்து சாதனை படைக்கவுள்ளார் கனடாவைச் சேர்ந்த ஜே.கோக்ராஜி. அடுத்தமாதம் முதலாம் திகதி நயாகரா நீர்வீழ்ச்சிக்கு மேல் 400 அடி உயரத்தில் ஆயிரத்து 800 அடி தூரத்துக்கு இவர் கம்பி மீது நடந்து சாதனை செய்ய இருக்கிறார். இத்றகாக இந்த நபர் தினசரி ப்யிற்சி செய்து வருகிறார்.

WORLD NEWS
உலக தரிசனம்

# ஜெயேந்திரர் மீது புதிய வழக்கு பதிவு செய்ய ஐகோர்ட் உத்தரவு



(சென்னை)

திருக்குறுங்குடியில் சிலை உடைத்தது தொடர்பாக ஜெயேந்திரர் மது வழக்குப் பதிவு செய்ய ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

திருக்குறுங்குடியில் உள்ள கோவிலில் சிவன் சிலையை உடைத்தது பெரிய குற்றமாகும். இதுகுறித்து பொலிஸில புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, இதில் சம்பந்தப்பட்ட ஜெயேந்திரர் உட்பட 5 பேர் மீது வழக்குப் பதிவு செய்யக்கோரி சென்னை ஐகோர்ட்டில் பொலிஸார் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை நீதிபதி பி.டி.தினகரன் நேற்று முன்தினம் விசாரித்து சிலையை உடைத்து அதை அகற்றியது தொடர்பாக பொலிஸில் மனுதாரர் கொடுத்த புகார் மீது பொலிஸார் உரிய முறையில் உரியவர்கள் மீது வழக்கு பதிவுசெய்து சட்டப்படி விசாரணை நடத்தவேண்டும். சிலையை உடைத்தது இந்திய தண்டனைச் சட்டப்படி குற்றமாகும் என்று கூறினார்.

இதன்படி இந்த சிலை உடைத்த விவகாரம் தொடர்பாக ஜெயேந்திரர் மீது வழக்குப் பதிவு செய்ய பொலிஸாருக்கு கோர்ட் உத்தரவிட்டுள்ளது என்று இந்த வழக்கில் ஆஜரான வக்கீல் தெரிவித்துள்ளார். (ற)



சென்னையை அடுத்த திருவொற்றியூர் கார்கில் நகரில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்காக அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீவிபத்தில் 600 வீடுகள் எரிந்து சாம்பலாயின. இச்சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.



ரஷ்யா பயணம் மேற்கொண்டுள்ள காங்கிரஸ். கட்சித்தலைவி சோனியா காந்தி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் சந்தித்து பேச்சுநடத்திய போது எடுக்கப்பட்ட படம்.

# அமெரிக்காவில் நிலநடுக்கம் 'சுனாமி' எச்சரிக்கை விடப்பட்டது

(கிரசென்ட் சிட்டி)

அமெரிக்காவின் வடக்குக் கலிபோர்னியா கடலோரப் பகுதியில் நேற்று முன்தினம பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டது.

இந்திய நேரப்படி புதன்கிழமை அதிகாலை 5.20 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அமெரிக்காவின் கிரசென்ட் சிட்டியின் தென்மேற்கு கடலோரப் பகுதியை மையமாகக் கொண்டு தாக்கிய இந்த நிலநடுக்கம் ரிக்டர் கருவியில் 7 ஆகப் பதிவாகியிருந்தது.

நிலநடுக்கத்தினால் கலிபோர்னியா கடலோரப்பகுதியில் கட்டடங்கள் அதிர்ந்தன. இதனால் மக்கள் பீதியடைந்தனர். எனினும் சேதம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

இது சற்று கடுமையான நிலநடுக்கம் என்பதால் சம்பந்தப்பட்ட பகுதிகளில் சுனாமி எசசரிக்கை விடப்பட்டது. ஆனால், அந்த எச்சரிக்கை அடுத்த ஒருமணி நேரத்தில் திரும்பப் பெறப்பட்டது. (ற)

# நடிகை மயூரி தற்கொலை



(சென்னை)

தமிழ்த் திரைப்பட நடிகை மயூரி தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

'கும்பகோணம் கோபாலு' என்ற படத்தில் அறிமுகமான நடிகை மயூரி சமபத்தில் வெளியான '7ஜி ரெயின்போ காலனி', 'மன்மதன்', 'கனாகண்டேன்' ஆகிய படங்களிலும் நடித்திருக்கிறார். இது தவிர மலையாளத்தில் மம்முட்டி, மோகன்லால் போன்ற பிரபல நடிகர்களுடன் நடித்திருக்கிறார். - 'சலனம்' என்ற தமிழ் ரி.வி. தொடரில் ஷாலினி என்ற பெயரில் இவர் நடித்து வந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு இவர் சாப்பிட்ட சாப்பாடு புட்பாயிசன் ஆகிவிட்டது. தொடர்ந்து வாந்தி எடுத்துவந்த இவரை சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்த்தனர். அங்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். இதில் அவர் உயிர் பிழைத்தார். அவரை குடும்பத்தினர் அண்ணா நகரில் உள்ள தமது வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவரது வீட்டில் உள்ளவர்கள் வெளியில் சென்றிருந்தபோது தனியாக வீட்டில் இருந்த மயூரி புடவையை சீலிங் பேனில் தொங்கவிட்டு அதில் தூக்குமாட்டி தற்கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. அவருக்கு வயது 22. குடும்பத்தினர் வீட்டிற்கு வந்து பார்த்தபோது மயூரி தூக்கில் தொங்கியபடி இறந்து கிடந்தார்.

இதுகுறித்து உடனடியாக அண்ணாநகரில் உள்ள பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. பொலிஸார் விரைந்து வந்து மயூரி உடலை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். நேற்று மாலை அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. மயூரி கடுமையான வயிற்றுவலியால இந்த முடிவுக்கு வந்ததாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

தற்கொலை செய்துகொண்ட மயூரிக்கு தந்தை குமார். தாயார் சாந்தி மற்றும் ஒரு சகோதரர் உள்ளனர். மயூரி திடீரென்று தற்கொலை செய்து கொண்டதற்கு காதல் தோல்வி காரணமாக இருக்குமா என்ற ஒரு கேள்வியும் எழுவதால் அதுபற்றியும் பொலிஸாரும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சமீபத்தில் திரைக்கு வந்த 'கனாகண்டேன்' படத்தில் அவர் வில்லன் நடிகர் பிருதிவிராஜின் ஜோடியாக நடித்திருந்தார். கணவனுககாக உதவி கேட்கப்போய் பிருதிவிராஜிடம் சிக்கிக்கொள்ளும் மயூரி பின்னர் அவரை விட்டு மீண்டு வரமுடியாமல் தவிப்பது போல் ஒரு உருக்கமான கதாபாத்திரத்தில் அவர் நடித்திருந்தார். இரண்டு மூன்று காட்சிகளில் மட்டுமே வந்தாலும் மனதில் பதியும் கதாபாத்திரமாக இருந்ததால் அவரது வேடம் பரபரப்பாக பேசப்பட்டது. (ற)

# ஈராக்கில் இராணுவ முகாமில் தற்கொலைப் படை தாக்குதல்

## 32 பேர் பலி; 29 பேர் படுகாயம்



(பக்தாத்)

ஈராக்கில் புதன்கிழமை இடம்பெற்ற தற்கொலைப்படைத் தாக்குதலில் ஈராக் இராணுவ வீரர்கள் 32 பேர் கொல்லப்பட்டதுடன் 29 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பக்தாத்தின் வடக்கே உள்ள பகூபா என்ற இடத்தில் அமைந்துள்ள காலிஸ் இராணுவ முகாமில் இந்தச் சம்பவம் நடந்தது.

உணவு இடைவேளையின போது இராணுவ வீரர்கள் அங்குள்ள ஹோட்டலில் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது இராணுவ உடையில் ஒருவர், தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தார். இதில் சம்பவ இடத்திலேயே 32 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ற)

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும் - குறள்

வலம்புரி

# பதினைந்து மாதப் பஞ்சமி கழிந்தது

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து விலகுவதாக ஜே.வி.பி நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

15 மாத ஆட்சிக்காலத்தில் ஜே.வி.பி. வெளியேறி இருப்பது நாட்டைப் பிடித்திருந்த 15 மாதப் பஞ்சமி கழிந்ததுபோல் உள்ளது.

ஆட்சி அமைப்புக்காக பிசாசுடனும் கூட்டுச்சேர்வதற்கு நான் தயாரெனக் கூறிய ஜனாதிபதி, தான் கூட்டுச்சேர்ந்தது ஒருவகையான பிசாசுடன் என்பதை இப்போது உணர்ந்திருப்பார்.

16 ஆசனங்களோடு இருந்த ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்ததன் மூலம் தனது பலத்தை 39 ஆக உயர்த்தியது. ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை ஓரங்கட்ட நினைத்த ஜனாதிபதிக்கு ஜே.வி.பி. நல்லதோர் பாடம் புகட்டியுள்ளது.

யாருடன் கூட்டுச் சேர்கின்றோம் என்பதை ஆழ்ந்துசிந்திக்காமல் செயற்படுவது எந்தளவுக்கு மோசமானது என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மட்டுமல்ல, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைகளும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை எதிர்க்கின்ற ஒருகட்சியால் இந்த நாட்டில் சமாதானத்தை ஒருபோதும் ஏற்படுத்தமுடியாது..

இனவாதத் தீயைக் கக்குவதன் மூலம் சிங்கள மக்களின் ஆதரவைப்பெறும் ஜே.வி.பியின் நரித் தந்திரம் இனிமேல் பலிக்கப்போவதில்லை என்பதையே அதன் வெளியேற்றம் சுட்டிநிற்கிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததனால் லாபம் ஜே.வி.பிக்கே. இதனை ஜனாதிபதி உணர்ந்திருந்தால் அக்கட்சி பெற்ற லாபத்தை முறியடிக்க எண்ணுவாராயின் அதற்கான தகுந்த சந்தர்ப்பம் இதுவேயாகும். அதாவது பொதுக்கட்டமைப்பை எதிர்த்து அரசிலிருந்து வெளியேறிய ஜே.வி.பிக்கு தகுந்த பாடம்புகட்ட வேண்டுமாயின் எந்தக் காலதாமதமும் இன்றி பொதுக் கட்டமைப்பை ஜனாதிபதி உடனடியாகக் கொண்டுவருதல் வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை கைச்சாத்திடுவதுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட இந்த நாட்டின் மக்களுக்கு நிவாரணக் கொடுப்பனவுகள் செவ்வையாகக் கிடைப்பதற்கும் ஆவனசெய்யவேண்டும்.

யார்தான் எதிர்த்தாலும் இறுதிமுடிவென்பது மக்களின் கைகளில் என்பதை எவரும் மறந்துவிடலாகாது. அவ்வகையில் பொதுக் கட்டமைப்பினை அமுல்படுத்தி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வியலுக்கு உரிய உதவிகளை ஜனாதிபதி வழங்குவராயின், அதனை மக்கள் நிச்சயம் வரவேற்பர். அந்த நன்றியை ஒருபோதும் மறக்கவும் மாட்டார்கள்.

அதேநேரம் தமது வாழ்வியலுக்கே ஆப்பு வைக்க நினைத்த ஜே.வி.பிக்கு தக்கபாடம் புகட்டுவர்.

எதற்காக ஜே.வி.பி. வெளியேறியதோ அதற்கு எதிராக செய்கின்றபோதே நாட்டிற்கு நன்மை செய்பவர் யார்? கெடுதி விளைவிப்பவர் யார்? என்ற வேறுபாட்டை மக்கள் அறியமுடியும்.

பொதுக் கட்டமைப்பை எதிர்த்து ஜே.வி.பி. விலகிய பின்னரும் அதனை அமுல்படுத்த ஜனாதிபதி தாமதிப்பாராயின் ஜே.வி.பிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான வேறுபாடு துலங்காமல் போய்விடும்.

ஆக, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னதாக பொதுக்கட்டமைப்பு விவகாரத்தோடு அரசிலிருந்து ஜே.வி.பி.விலகிமை இந்த நாட்டை பிடித்திருந்த பஞ்சமி விலகியதாக கருதிக்கொண்டு, ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பையும் அதேநேரம் சமாதான முயற்சிகளையும் முன்னெடுக்கவேண்டும்.

# பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவது அவசியம்

## -மட்டு.அம்பாறை மாவட்ட சங்கநாயக்கர் சுமணரத்ன தேரர்

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலை புனரமைப்புப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பு உடனடியாக் அமைக்கப்படுவது அவசிமென மட்டக்களப்பு-அம்பாற்ற மாவட்ட சங்கநாயக்கர் அம்பிட்டிய சுமணரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்:

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் பௌத்த தேரர்கள் காட்டிவரும் எதிர்ப்புகளை விமர்சித்த அவர், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படுவது அவசியமாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டில் ஜனாதிபதி கொண்டுவரவிருக்கும் பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத்தெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடாததப்படுகின்றன.

அதுவும் புத்தபிக்குகள் இதற்கு எதிர்ப்புத்தெரிவித்து வீதிகளில் அமர்ந்து போராட்டங்களை நடாத்துகின்றார்கள். ஆழிப்பேரலை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் உட்பட வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனை நாளாநதம் கிராமம் கிராமமாகச் சென்றுவரும் போது காணமுடிகின்றது. இதன்காரணமாக இந்தப் பிரதேசங்களைப் புனரமைப்பதற்கு ஏதாவது திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும. அதற்கு பொதுக்கட்டமைப்பு மிகவும் அவசியமானதாகும்.

இந்த முயற்சியானது நாட்டின் பிரச்சினையைத் தீாப்பதற்கும் சமாதானத்திற்கும் ஒரு நல்லவழியாகவும் அமையும். இதனைவிடுத்து ஜே.வி.பி.தேசிய பிக்குகள் முன்னணி மற்றும் ஜாதிகஹெல உறுமயவின் பிரதிநிதிகள் தத்தமது எதிர்கால அரசியல் நலன்கருதி மாத்திரமே செயற்படுகின்றனர்.

அவர்கள் நாட்டின் நலனை முன்னிறுத்தவில்லை. இச்செயல்கள்யாவும் நாட்டினைச் செயலிழக்கச்செய்துவிடும். எனவே, இந்நிலையில் போராட்டம் மேற்கொள்ளும் பௌத்த பிக்குகள் அப்போராட்டங்களைக் கைவிட்டு பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவளிக்க வேண்டும்.

அத்துடன், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கும் உதவ வேண்டும். வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு பிக்குமார்கள் வந்து பார்ப்பார்களானால் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் யாவற்றையும் தெரிந்துகொள்ள முடியும.

எனவே, பௌத்தகுருமார் தமது போராட்டங்களை நிறுத்தி பொதுக்கட்டமைப்புக்கு இடம்தர வேண்டும் எனவும் சுமணரத்ன தேரர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார். (ற-4)

# தம்பர அமில தேரர் மரணமடைந்தால்...

## பிக்குகள் முன்னணி ஜனாதிபதிக்கு கொலை அச்சுறுத்தல்

பொதுக்கட்டமைப்பை கைவிடக்கோரி உண்ணாவிரதம் இருந்த தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த தம்பர அமில தேரர் சுயநினைவிழந்த நிலையில் இருப்பதாகக்கூறப்படுகிறது.

ஊடகவியலாளர்களிடம் இது குறித்து பிக்குகள் முன்னணியின் செயலாளர் கலவெல்கல சந்த்ரலோக்க தேரர் கூறியதாவது,

6 நாள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தம்பர அமில தேரர் மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சுயநினைவிழந்துள்ளார்.

தேரரின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்க மருத்துவர்கள் மறுத்துவிட்டனர். நாட்டைக் காப்பாற்ற நாம் முக்கிய தருணத்தில் நிற்கின்றோம். எமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதிலை அழிக்காமல் விட்டாலோ, தம்பர அமில தேரர் மரணமடைந்து விட்டாலோ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நிம்மதியாக வாழ விடமாட்டோம்.

நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு ஜனாதிபதியிடம் இருந்தோ மகாநாயக்க தேரரிடமிருந்தோ எவரிடமிருநதும் உரிய பதில் கிடைக்கவில்லை. இந்த நாட்டில் மகா சங்கத்தின் உண்மையான பலம் அவர்களுக்குத் தெரியவில்லை. அமில தேரரின் உயிருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அப்போது அவர்கள் அதை உணர்வார்கள்.

தம்பர அமில தேரர் மரணமடைய நேரிட்டால் அந்தப் பாவச் செயலைசெய்த அரசுக்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராடுவோம். பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி சந்திரிகா கையெழுத்திட்டால் அவருக்கு அதுவே கடைசி நிமிடங்களாக இருக்கும்..தேரர் மரணமடைய நேரிட்டால் நாட்டில் ஏற்படப்போகும் அழிவுகளை எங்களால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு.

அனைத்து நிகாயங்களின் மகாநாயக்கர்களும் தம்பர அமில தேரரின் இறுதிச் சடங்குகள் முடியும்வரை மௌனமாக இருக்கப்போகிறார்களா? என்றார் அவர். பிக்கு முன்னணியின் மற்றொரு தலைவரான ரத்னபால தேரர் கூறுகையில்,

ஜனாதிபதி சந்திரிகா தம்பர அமில தேரர் விடயத்தில் அமைதியாக இருப்பது பௌத்த பிக்குகளால் அவரது தந்தை படுகொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே இருக்கிறது என்றார்.

அவரது தந்தையின் மரணத்திற்காக பௌத்த பிக்குகளின உயிரைப் பழிவாங்க ஜனாதிபதி சந்திரிகா எண்ணினால் அவர் அனைத்தையும் இழந்துவிடுவார் என்றும் அவர் கூறினார். தேசப்பிரேமி பிக்குகள் முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நலக தேரர் கூறியதாவது, 1999ஆம் ஆண்டு டிசம்பா 18ஆம் திகதி ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவிற்கு தொலைபேசியில் அவரது உயிருக்கு நேர்ந்த அச்சுறுத்தல் குறித்து எச்சரித்தோம். அந்த நாட்களில் நாங்கள் சொனனதை அவர் செவிமடுக்காததாலேயே அப்படியான சூழ்நிலையை அவர் எதிர்கொள்ள நேரிட்டது.

பொதுக்கட்டமைபபில் ஜனாதிபதி சந்திரிகா கையெழுத்திடடால் அதே சூழ்நிலையை இப்போதும் அவர் எதிர்கொள்ள நேரிடும் என்றார் அவர். (ற)

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு இரு வாரங்களில் அடிக்கல்

(சென்னை)

சேது சமுத்திரத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா அடுத்தமாதம் முதல் வாரம் நடைபெறவுள்ளது. இந்த விழாவில பிரதமர் மன்மோகன்சிங் பங்கேற்கவுள்ளார்.

ரூபா 2,424.40 கோடி மதிப்பிலான இத் திட்டப்பணிக்கான அடிக்கல்நாட்டுவிழா நடைபெறும் இடம் இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை.

அடிக்கல நாட்டு விழாவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி, மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு உள்ளிட்டோர் பங்கேறகவுள்ளனர். மதுரை, இராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய மூன்று இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் அடிக்கல்நாட்டுவிழா நடைபெறும் என்று சேது சமுத்திரம் கார்பபரேசன் நிர்வாக இயக்குநர் என்.சி.ரகுபதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது விழாவில் பங்கேற்பதற்காக அனைதது அதிகாரிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப்படும். திட்டஇயக்குநர் என்றவகையில் முதல்வர் ஜெயலலிதா, ஆளுநர் சுர்ஜீத் சிங் பர்னாலா ஆகியோருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்படும். இத் திட்டத்திற்கு தேவைப்படும் நிதிவசதிகளை ஒருங்கிணைக்கும் பணிகளுக்காக யு.டி.ஐ வங்கி நியமிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூபா 495கோடி நிதி அளிக்கிறது. தூத்துக்குடி துறைமுகம் மற்றும் இந்தியக் கப்பல் கழகம் தலா ரூபா 50கோடி முதலீடு செய்கிறது. இவை தவிர சென்னைத் துறைமுகம், விசாகப்பட்டினம் துறைமுகம், எண்ணூர் துறைமுகம், பாரதீப் துறைமுகம் மற்றும் இந்திய அகழ்வு காாப்பரேஷன் ஆகியன தலா ரூபா 30கோடி முதலடு செய்யும்.

எஞ்சியநிதி பொதுப்பங்கு வெளியீடு மூலமும் நிதி நிறுவனங்களிடமிருநது கடன் பெறுவதன் மூலமும் திரட்டமுடிவு செய்யப்பட்டுள்ளது. கடனாகப் பெறப்படும் நிதியில் 50சதவீதம் வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்து திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சியதொகை இந்திய நிறுவனங்களிடம் இருந்து திரட்டப்படும். இத்திட்டத்தை நிறைவேற்றுவதால் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

இத்திடடத்தை நிறைவேற்றுவதற்காக சுயஸ் கால்வாய் நிறுவனத்துடன் ஒப்பந்தம்செய்து கொள்ளப்படும் இதற்காக மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் இணைச் செயலாளர் ஏ.கே.பல்லா எதிர்வரும் 19ஆம் திகதி எகிப்து செல்லவுள்ளார்.

அடிக்கல் நாட்டப்பட்ட நாளில் இருந்தே பணிகள் தொடங்கும. 30 மாதங்களில் பணிகள் நிறைவடையும் என்றார் ரகுபதி.(ற)



## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதியைப் போன்றவர் இறைவன். தொட்டால் அந்தப்பொருளின் வடிவம் மாறாது. ஆனால அதன் இயல்பு மாறும். நமது மனித வடிவம் அப்படியே இருக்கும். ஆனால் பிறகுக்கு தீங்கோ பாவமோ செய்யும் எண்ணம் நமக்கு இருக்காது என்று என் குருதேவர் கூறுவது உண்டு.

சுவாமி விவேகானந்தர்

# உலகவங்கியின் வீடமைப்புத் திட்டம்

# 1000 பயனாளிகளுக்கு கொடுப்பனவு

## நேற்று செயலகத்தில் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் நிதியுதவியுடன் வடக்குக் கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத் தின்கீழ் யாழ். மாவட்டத்தில் முதற்கட்டமாக ஆயிரம் பயனாளிகளுக்கான முதற் கட்டக் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா நேற்று வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு நேற்றுக் காலை 11 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சிவாஜிலிங்கம், சுழவேந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியான மதனராஜா, வடக்குக் கிழக்கு மாகாண வீடமைப்பு மீள் நிர்மாண திட்டப் பணிப்பாளர் செ.பத்ம நாதன், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வீரபத்திரப்பிள்ளை, மற்றும் பிரதேச செயலர்கள், கிராமசேவையாளர்களும் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த வீடமைப்புத் தொடர்பாக உரையாற்றியதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களாலும், பிரதேச செயலர்களாலும் பயனாளிகளில் முதலாம்கட்டக் கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

பின்னர் நேற்றுமாலை பயனாளிகளுக்கு இவ் வீடமைப்புத் தொடர்பான பயிற்சி வகுப்பொன்றும் நடத்தப்பட்டது. (ந-19)

## இடமாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளரை இடமாற்றக்கோரி வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கம் நேற்று நீர்வேலியில் உள்ள பிரதேசசபைக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தியது.

பிரஸ்தாப செயலாளருக்கு இடமாற்றம் கிடைத்தும் அவர் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து, மேற்படி பிரதேசசபையிலேயே கடமையாற்றுகின்றார்.

ஏனவே அவரை இடமாற்றக்கோரியே இந்த எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-19)

## விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய விசேட உற்சவதினங்களை ஒட்டி எதிர்வரும் 20 திகதியில் இருந்து 24ஆம் திகதி வரை பக்தர்களின் நன்மைகருதி யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து 15 நிமிடத்திற்கு ஒரு பேருந்தை விசேடசேவையாக நடத்துவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஒழுங்குசெய்துள்ளதாக சபையின் பொது முகாமையாளர் க.கணேசபிள்ளை அறிவித்துள்ளார். (ற)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சி.பி கணனிக்கல்வி நிறுவனத்தின் விரிவுரைகள்யாவும் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

முதற் பயிற்சிநெறியினை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனதிராசா காலை 9மணிக்கு ஆரம்பித்து வைத்து 'தகவல் தொழிநுட்பமும் இன்றைய உலகமும்' என்னும் கருப்பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். (ற)

## ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இன்று சுதுமலை அம்மன்கோவில் சுற்றாடல் வீதியில் நாயகன் சனசமூக நிலையம் மற்றும் ஈஞ்சடி வைரவர் கோயிலடியிலும் இந்தத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளதாக உள்ளூராட்சி உதவியாளர் அறிவித்துள்ளார். (ற)

## மூன்று நாட்களில்...

கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை வாசிங்டனில் நடைபெற்றதும், அதில் பொதுக்கட்டமைப்பை உடனடியாக ஏற்படுத்தும்படி சம்பந்தப்பட்ட தரப்புக்களை வற்புறுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டதும் தெரிந்ததே.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக வாஷிங்டன் சென்றிருந்த நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன் இலங்கையில் சடுதியாக ஏற்பட்டுவரும் அரசியல் மாற்றங்களை அடுத்து ஒஸ்லோ விரைந்தார்.

அங்கிருந்து அடுத்துவரும் நாட்களில் கொழும்பு புறப்படும் அவர் வார இறுதிக்குள் இங்கு வந்து சேருவார் என தெரியவருகிறது. எனினும் பொதுக்கட்டமைப்பில் ஒப்பமிடும் [illegible]காரம் அவரது வருகைக்காக காத்திராமல் தன்பாட்டில் நடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் வாஷிங்டன் கூட்டத்திற்காக அங்கு சென்றிருந்த நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் இன்னும் அமெரிக்காவிலேயே தங்கியிருக்கின்றார்.

பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களை இன்று வெள்ளிக் கிழமை ஜனாதிபதி சந்திரிகா சந்திக்கின்றார். அப்போது அவர் அடுத்துவரும் தினங்களில் பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டில் அரசுத் தரப்பு கையொப்பமிட இருப்பது பற்றிய தகவலை மகாநாயக்கர்களுக்கு தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் இலங்கைத்தரப்பில் அமைச்சு ஒன்றின் செயலாளர் ஒருவரே கையெழுத்திடுவார். புலிகளின் மட்டத்தில் சமாதான செயலகத்தைச்சேர்ந்த ஒருவரே கையெழுத்திடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் உடன்பாட்டில் கையெழுத்திட்ட பின்னரே அதனைப் பாராளுமன்றத்திற்கு ஒரு பிரேரணையாக அங்கீகரிப்பதற்கு ஜனாதிபதி அனுப்பி வைப்பார் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-4)

## பொதுக்கட்டமைப்பு...

இதனைப் பாராளுமன்றிற்கு கொண்டு வருவதென சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் முடிபு செய்துள்ளனர்.

இவ்விடம் பற்றி விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கப்பட்ட போது பொதுக்கட்டமைப்பு பாராளுமன்றிற்கு கொண்டுவரப் பட்டாலும் இல்லாவிடினும் அதில் அரசாங்கம் கைச்சாத்திட வேண்டும் எனஅவர்கள் தெரிவித்துள்ளனர். (ந)

## சமாதான முன்னெடுப்...

வன்முறைகளை முடிபுக்குக்கொண்டுவரும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளபோதும் அரசுக்குள் காணப்படும் உட்பிளவுகள் காரணமாகவும் இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் காணப்படும் நம்பிக்கையில்லாத் தன்மையாலும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான அமைதி முயற்சிகள் தடைப்பட்டுள்ளன.

இந்த நிலையை நீக்கும் வகையில் நோர்வே அரசு மேற்கொண்டுவரும் அனுசரணை முயற்சிக்கு அமெரிக்கா பூரண ஆதரவு அளிக்கின்றது. கடந்த சில மாதங்களாக ஆழிப்பேரலை தொடர்பான நிவாரணப்பணிகள் அமைதி முயற்சிகளை இரண்டாம்தரப் பிரச்சினையாக பின்தள்ளி இருந்தன. இந்த அனர்த்த நிவாரண நிதியை பங்கிடுவதற்கான பொது உடன்பாட்டை எட்டுவதற்கு நோர்வேயின் அனுசரணையுடன் இரண்டு தரப்பினரும் முயன்றுவருகின்றனர்.

இந்தப் பொது இணக்கப்பாடு அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான பிரதான உதவுபொருள் மட்டுமல்லாமல், இரு தரப்பினருக்கும் இடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு பிரதான தளமாகவும் அமைந்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்பை அமைக்க தயாராகவே உள்ளார்.அவரின் முயற்சிக்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவை வழங்குமென்றும் கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்தார். (ந-04)

## ஜே.வி.பி. விலகியது...

விளைவுகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல.

'இனிமேல் நாம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்து சுயாதீனமாக இயங்கவல்ல கட்சியாக செயற்படுவோம். நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, தென்னிலங்கையிலுள்ள மாகாண சபைகளிலும் எமது உறுப்பினர்கள் எதிர்க் கட்சியிலேயே அமர்வார்கள்' என்று கூறினார்.

இதேவேளை ஜே.வி.பி அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தமது பதவிகளை நேற்றைய தினம் இராஜினாமாச் செய்தனர். ஜே.வி.பியின் நான்கு அமைச்சுக்களையும், எட்டுப் பிரதி அமைச்சுக்களையும் கொண்டுள்ளதுடன், 39 நாடாளுமன்ற ஆசனங்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி ஜே.வி.பியியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் கூட்டணி அமைத்துக்கொண்டமையும், இக்கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றமையும் தெரிந்ததே. (ந)

## பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண பொதுச் சேவையில் அரசாங்கத்தின் வேலையற்ற பட்டதாரிகளுக்கான பொருத்தமான பதவி ஒன்றினை வழங்கும் திட்டத்தின் கீழும், கீழ் உழைப்பு நிலையிலுள்ள பட்டதாரிகளைப் பொருத்தமான பதவிகளுக்கு நியமிப்பதற்கும் ஏதுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் விண்ணப்பித்த பட்டதாரிகளின் தராதரப் பத்திரங்களை பரிசீலனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை 2005.06.22 முதல் 2005.06.26 ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பட்டதாரிச் சான்றிதழ், கிராம உத்தியோகத்தரால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (மூலப்பிரதி), பட்டதாரிப் பயிலுநராக ஆள்சேர்ப்புச் செய்யப்பட்டு ஆரம்பப் பயிற்சியையும், தற்போது நடைபெறும் முறையான பயிற்சியையும் பெற்றமைக்கான சான்றிதழ்கள் என்பவற்றுடன் வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகளுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. (ந-08)

## நயினையில் மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் 10 ஆம் நாள் திருமஞ்சத் திருவிழா இன்று இடம்பெறவுள்ளது.

இன்றுகாலை அம்பாளுக்கு 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று அழகிய கைலாச வாகனத்தில் அம்பாள் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும், இரவு விசேட மேளவாத்தியங்களுடன் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட கலைமிளிர் சித்திரத் திருமஞ்சத்தில் அம்பாள், விநாயகப் பெருமான் வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான் சகிதம் எழுந்தருளி திருவீதி வலம்வரும் காட்சியும் இடம்பெறவுள்ளதாக திருவிழா உபயகாரர்கள் தெரிவித்துள்ளார்கள். (அ-2)


யாழில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்

கடல், விமான மார்க்கமாக வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றுடன் கடிதங்கள், விடியோ நாடாக்கள் முதலியவற்றை குறைந்த செலவில் அனுப்பிட

| கடல் மார்க்கமாக (SEA CARGO) | | விமான மார்க்கமாக (AIR CARGO) | |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், ஹொலண்ட், இத்தாலி) | 5 KG 2500/= | கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன் | 1 KG 1000/= |
| கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, லண்டன் | | ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, ஹொலண்ட்) | 1 KG 650/= |

Note: நாமே பொதிசெய்து அனுப்புவோம்

RAINBOW TRAVELS & TOURS
32/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(அபிநயா நகைமாடத்திற்கு மேல்) T.P: 0777328219

எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின்சார உபகரணங்களும், உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்
நியூ சிற்றி றேடர்ஸ்
மேல்மாடி. இல135/1 கஸ்தூரியார் வீதி
குளத்திற்கு முன்பாக யாழ்ப்பாணம்
(C- சு) T.P: 021 222 3226

மனோகரா யாழ்
இன்றுமுதல் அதிரடி வெளியீடு
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லிஆகியோரின் சிறப்பு நடிப்பில்


இயக்கம்: ஷங்கர்
இசை: ஹரிஸ் ஜெயராஜ்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்டி பெண்டன்ஸ்டே டைரக்டர் ரோலண்ட் எம்ரிக் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந்த், மீனா, நம்பியார் மற்றும் பலர் நடித்த
சேதுபதி I.P.S
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.